FRIENDS MISSIONARY PRAYER BAND

YOUTH & TEENS WING

# கேரீத்

A monthly Prayer Bulletin for Youth & Teens

Vol 13 - Transmit 02 - February 2020

# முற்பிதாக்கள் காலம்

வாக்குத்தத்தம் தேவ வாக்குத்தத்தம்
வானம் பூமி ஒழிந்தாலும்
நிலைத்திருக்கும்
நித்திய வாக்குத்தத்தம்தேவனும் அவரே
நித்திய ஜீவனும் அவரே
வாக்குமாறா நித்தியர் இயேசுவே!




12 STAGES OF BIBLE

PATRIACHEL STAGE 2



Private circulation only

# முற்பிதாக்கள் காலம்



(ஆதி 12-50 மற்றும் யோபு)

முற்பிதாக்கள் காலத்தில் மிக முக்கிய நிகழ்வாக ஆபிரகாம் ஈசாக்கை பலியிட செய்ததும், ஈசாக்கு, யாக்கோபை ஆசீர்வதித்ததும், யோசேப்பு எகிப்துக்கு சிறைப்பட்டு போவதும், இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்துக்கு போவதும் முக்கிய நிகழ்வுகளாக காணலாம்.முற்பிதாக்களின் காலத்தில் வசித்த மிகப் பிரதானமான கதாப்பாத்திரங்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு மற்றும் யோபு ஆவர்.முற்பிதாகக்களின் காலத்தில் முக்கிய பெண் கதாபாத்திரம் ரெபேக்காள் மற்றும் பிரதான ஆசாரியனாகிய மெல்கிசிதேக் இப்பகுதியில் பார்க்கலாம்.சிருஷ்டிப்பின் காலத்தில் தேவன் பொதுவாக பூமி முழுவதையும் கையாண்டதை பார்க்கமுடியும். உதாரண மாக ஆதியாகமம் 1 முதல் 11 வரை உள்ள பகுதியில் ஒட்டுமொத்த மனிதர்களையே பிரதானப்படுத்தியதை பார்க்கலாம். இப்போது முற்பிதாக்களின் காலத்தில் தேவன் தம் கவனத்தை உலகத்திலிருந்து ஒரு தேசமாக இஸ்ரேலை தெரிந்தெடுக்கிறார். பின்னர் அந்த தேசத்தில் ஒரு கோத்திரமாக யூதா கோத்திரத்தை தெரிந்தெடுக்கிறார். அதன்பின்னர் அந்த யூதாக்கோத்திரத்திற்குள் ஒரு குடும்பமாக ஈசாவின் குடும்பத்தை தெரிந்தெடுக்கிறார், இறுதியாக ஈசாவின் குடும்பத்திற்குள் ஒரு நபரான இயேசு கிறிஸ்துவை தெரிந்தெடுத்து இவர் மூலமாக வாக்குத்தத்தம் முழுவதையும் நிறைவேற்றுகிறார்.

**முற்பிதாக்களின் காலம் சுமார் 350 ஆண்டுகள் வரை நீடிக்கிறது.**

## முக்கிய நபர்கள்

முற்பிதாக்களின் காலம் சுமார் 350 ஆண்டுகள். இந்தக் காலத்தில் கடவுள் ஆபிரகாமை ஒரு நண்பராக பாவித்து சோதோமின் அழிவைக்குறித்து அவருடன் எவ்வாறு பேசுகிறார் என்பதையும், லோத்தின் குடும்பம் பாதுகாக்கப்படுவதையும் சமவெளிகளில் உள்ள ஒரு நகரமாகிய சோதோம் கொடிய பாவத்தினால் அழிக்கப்பவதை இங்கு பார்க்கலாம்.


ஈசாக்கு


யோபு


ஆபிரகாம்


ரெபேக்காள்


யாக்கோபு


யோசேப்பு


மெல்கிசிதேக்

முற்பிதாக்கள் காலத்தில் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுத்து ஈசாக்கை கொல்லும் ஒரு நிலையைக் கொடுத்து பலியிடாமல் காப்பாற்றுவதும் இப்பகுதியில் பார்க்கலாம்(ஆதி 19:2). ஆண்டவருடைய எதிரியாகிய சாத்தான் ஒரு பரிசுத்தவானாகிய யோபுவைக்குறித்து எப்படி பேசுகிறார் என்பதையும், சாத்தான் தேவனிடம் அவனை சோதிப்பதற்கு அனுமதி கேட்பதையும் இப்பகுதியில் பார்க்கலாம். (ஆதி 18, யோபு 1-2) என்பதையும் சொல்கிறது. முற்பிதாக்கள் காலத்தில் இங்கே எத்தனாகிய யாக்கோப்பு, தன் தந்தையாகிய ஈசாக்கை ஏமாற்றுகிறான்.பின்னர் தன் மகன்களான யோசேப்பின் சகோதரர்களால் ஏமாற்றப்படுகிறான். (ஆதி 27:37) இங்கே முதல் பிள்ளையற்ற மனைவியாகிய சாராள் மற்றும் முதல் மரிக்கும் தாயாகிய ராகேல் (ஆதி 16:35) பற்றி வேதத்திலுள்ள முற்பிதாக்கள் காலத்தில் அறிகிறோம்.எருசலேம் பரலோகத்துக்கு மாதிரியாகவும், மற்றும் எகிப்து பூலோகத்துக்கு மாதிரியாகவும் இந்தக் காலகட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஆதி13-14) இங்கே நாம் மெல்கிசேதேக் என்ற ராஜாவையும் மக்பேலா என்ற குகையும் பற்றி அறிந்து கொள்கிறோம் (ஆதி 14:25).

## முக்கிய நிகழ்வுகள்

யோசேப்பு
எகிப்துக்கு சிறைப்பட்டு போவது



ஈசாக்கு
யாக்கோபை ஆசீர்வதிப்பது



இங்கே மூன்று மிக முக்கிய உடன்படிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1.ஆபிரகாமின் உடன்படிக்கை ஒரு நல்ல நிலத்தை உறுதியளிக்கிறது. (ஆதி 15)
2.தாவீதின் உடன்படிக்கை, ஒரு புகழ் பெற்ற ராஜாவுக்கு வாக்குறுதி அளிக்கிறது (2 சாமு 7).
3.புதிய உடன்படிக்கை ஒரு தேவபக்தியுள்ள மக்களுக்கு வாக்குறுதி அளிக்கிறது (எரே 31).

இஸ்ரவேல்
ஜனங்கள் எகிப்துக்கு போவது





ஆபிரகாம்
ஈசாக்கை பலியிடுவது

– Bro.Selwyn

12 STAGES OF BIBLE
PATRIACHEL STAGE 2



EDITORIAL

# வாக்கு பண்ணினவர் மாறிடார்

இந்த புதிய ஆண்டிலும் இரண்டாம் மாதத்தில் அடி எடுத்து வைக்க உதவின ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம். இந்த மாதம் நம்முடைய தியானத்தை தொடர்ந்து, இரண்டாம் நிலையாகிய முற்பிதாக்களின் காலத்தைக் குறித்து பார்க்க போகிறோம்.இது ஆதியாகமம் 13 முதல் 50 அதிகாரம் உள்ளடக்கியது. அநேகருக்கு இந்த புதிய ஆண்டில் ஆண்டவர் புதிய வாக்குத்தத்தங்களை கொடுத்திருப்பார் என்று விசுவாசிக்கிறேன். முற்பிதாக்களின் காலத்திற்கு மற்றொரு பெயர் வாக்குத்தத்த காலம். தேவன் வாக்குபண்ணினதை நிறைவேற்றுகிறார்.வாக்குபண்ணினவர் மாறிடார் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.ஆபிரகாமின் உடன்படிக்கையின் மூலம் கொடுக்கப்பட்ட வாக்குத்ததங்களின் ஆசீர்வாதங்கள் ஒவ்வொன்றும் ஆபிரகாம் தனிபட்ட வாழ்வு மட்டுமல்லாது சந்ததி, தேசம் மற்றும் உலக அளவிலும் நிறைவேறும் சரித்திர தொடர் நிலை கொண்டது.

1.தனிப்பட்ட வாக்குத்தத்தம்: ஆபிரகாமின் தனிபட்ட வாக்குத்தத்தங்கள் உன்னை ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்று ஆசீர்வதித்தார் (ஆதி 12:2).

2. பிறருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்:
லோத்துவை காப்பாற்றுகிறான் (ஆதி 15). பாபேல் கோபுரம் கட்டும் மனிதர்கள் தங்களுடைய பெயரை பிரஸ்தாபப்படுத்த நினைத்தனர். ஆனால் ஆண்டவரோ உன் பெயரை பெருமைப்படுத்துவேன் என்றார். இன்று வரை யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும், இஸ்லாமியர்கள் மதிக்கும் அளவிற்கு ஆபிரகாம் பெயரை பெருமைப்படுத்தினார், கடற்கரை மணலாய் சந்ததியை ஆசீர்வதித்தார் (ஆதி 13:18, 15:4-5, 17:16).

3. தேசிய வாக்குத்தத்தம்: (ஆதி 13:14-18) ஆபிரகாம் மூலம் இஸ்ரவேல் என்னும் சந்ததியை உருவாக்கி, அவர்களை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவித்து, அவர்களுக்கு கானான் தேசத்தை கொடுத்தார் (உபா 31:7, 8:7-8, 32:42-52, யோபு 1:1-5,10,11).

4.உலகளாவிய வாக்குத்தத்தம்: (ஆதி 12:3) ஆபிரகாமின் சரீரபிரகாரமான சந்ததியாரும் இஸ்ரவேல் மூலமாக ஈசாவின் குடும்பத்தில் ஒரு நபரான இயேசு கிறிஸ்துவை தெரிந்தெடுத்து இவர் மூலமாக வாக்குத்தத்தம் முழுவதையும் நிறைவேற்றுகிறார். இயேசு கிறிஸ்துவை தேவன் உலக இரட்சிப்பிற்காக அனுப்பினார்.

வாக்குபண்ணினதை நிறைவேற்ற ஒருநாளும் மறவாதவர், வாக்குபண்ணினவர் மாறிடார் என்பதை இம்மாத இதழில் வாக்குத்தத்தகாலம் என்று அழைக்கும் முற்பிதாக்களின் காலத்தை ஜெபத்துடன் வாசிப்போம். தேவன் உங்களையும் தனிநபராக ஆசீர்வதித்து தேசத்தில் மட்டுமல்ல உலகளாவிய ஆசீர்வாதமாக மாற்றுவார். வாக்குத்ததங்களாக கொடுக்கப்பட்டுள்ள அவருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து தியானிப்போம்.வாக்குத்தத்தை சுதந்தரித்து கொள்ள இம்மாத கேரீத் இதழ் உங்களுக்கு உதவும் என விசுவாசிக்கிறோம். ஜெபத்துடன் வாசிப்போம், ஆபிரகாமின் வாக்குத்தத்தமும், தேவ திட்டமும் உங்கள் மூலமாகவும் வெளிப்பட பொறுமையாய் காத்திருப்போம். தேவன் உன்னையும் தனிப்பட்ட வாழ்விலும், குடும்பத்திலும் தேசத்திலும் ஆசீர்வதித்து சுகித்திருக்க பண்ணுவாராக. ஆமேன்.


இயேசு கிறிஸ்துவின் பணியில்
பி.செல்வின்

kerithmagazine@fmpb.org
9841973060 , 9445001563



## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிபர் மற்றும் இளம் வாலிபர் ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்

## தரிசனம்

இந்தியாவின் எதிர்கால தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை விதைத்திடவும், சிந்தனைக் கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையில் இளைஞர்களுக்கான ஓர் இறை படைப்பு.

## நோக்கம்

வாலிபர் – இளம் வாலிபர் ஜெபக்குழுக்களை வலுப்படுத்தும் மாத இதழ்

## தயாரிப்பு & வடிவமைப்பு

வாலிபர் மற்றும் இளம் வாலிபர் பிரிவு

FMPB Youth wing
9, Rhenius Street
Palayamkottai
Tirunelveli - 627002
Cell : 9003251982

FMPB Youth wing,
90/86 Basanthi Devi Aparts,
Kothaval Chavadi St
Saidapet, Chennai -15
Cell : 9841032224

www.fmpbyouth.org
Kerithmagazine@gmail.com

தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-

Youth & Teens Wing
29.High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn.277

சந்தா மற்றும் முகவரி மாற்றத்திற்குக் கூப்பிடுங்க

Cell : 9445001563
9445052797


## ஜெபக்குழுத் தலைவர்களுக்கு...

ஜெபக்குழுவில் நீங்கள் தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழின் செய்திகளும் ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப் பிரித்து நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றைத் தனியாக எடுத்து ஜெபநேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவிற்கு வரும் வாலிபர்களுக்கு படிக்கக் கொடுக்கலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள், ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

## தொடர் ஜெபத்திற்கு


அறைகூவல்
மாத இதழ் பயன்படுத்தவும்




# வாக்குத்தத்த முற்பிதாக்கள் காலம்

தேவனுடைய கிருபையினால் இந்த புதிய ஆண்டில் முதல் மாதத்தை கடந்து வர உதவி செய்ததற்காக தேவனைத் துதிப்போம். இரண்டாம் மாதத்தில் நாம் நம்முடைய வேத தியானத்தில் முற்பிதாக்களின் காலம் என்ற தலைப்பில் பார்க்க இருக்கிறோம். ஆதி 12-ம் அதிகாரம் முதல் 50-ம் அதிகாரம் வரை உள்ளடக்கிய இக்காலம், ஆபிரகாம் ஊர் எனும் கல்தேயப் பட்டணத்திலிருந்து கானான் தேசம் செல்ல அழைக்கப்பட்ட காலத்திலிருந்து, தேவன் சீனாய் மலையில் மோசே மூலம் இஸ்ரவேலருக்கு கட்டளை கொடுத்த காலம் வரை இது அடங்கும். ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன. நமது முற்பிதாக்கள் அந்த வாக்குத்தத்தை மட்டுமே பிரதானமாய் நம்பி வாழ்ந்ததால் இக்காலம் வாக்குத்தத்தத்தின் காலம் அல்லது முற்பிதாக்களின் காலம் என அழைக்கப்படுகிறது. சிருஷ்டிப்பின் காலம் வரை தேவனது ஆளுகை முழு உலகை சார்ந்ததாக இருந்தது. ஆனால் இக்காலத்திலிருந்து எல்லாவற்றிற்கும் பிரதிநிதியாக, ஒரு தனி மனிதன், ஒரு குடும்பம் மற்றும் ஒரு தேசத்தை ஆண்டவர் தெரிந்தெடுத்து ஆளுகை செய்தார்.

வாக்குத்தத்தங்களை பெற்ற ஆபிரகாமும் அவன் சந்ததியாருக்கும் அதை குறித்த விசுவாசத்தையும், நம்பிக்கையையும் உறுதியாக பற்றிக்கொண்டு மற்ற மக்களிடையே ஒரு வேறுபட்ட வாழ்வை வாழ தேவன் விரும்பினார் (ஆதி 15:6, 17:1, 22:14, 24:3,4). மிக முக்கியமாக அவர்கள் தேவன் தந்த வாக்குத்தத்த பூமியில் தங்கியிருக்க வேண்டும். உலகமான எகிப்துக்கு செல்லக் கூடாது என தேவன் விரும்பினார். அதற்கென்று ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு காலத்தில் சில பஞ்சங்களை உண்டுபண்ணினார். மற்றும் ஆபிரகாமிடமிருந்த ஒரே குமாரனை பலியிட கேட்டு, வாக்குத்தத்தின் படி வாழ்கிறார்களா என்று சோதிக்கப்படுகையில், நாம் யாரும் எண்ணிக்கூட பார்க்க முடியாத ஒரு பெரிய காரியத்தை ஆபிரகாம் செய்தார். தான் மிகவும் நேசித்த ஒரே மகனை பலியிட முற்பட்டு, தேவன் மேலும் அவரின் வாக்குத்தத்தின் மேலும் உறுதி யாக இருப்பதை எடுத்துக்காட்டினான். காலம் கடந்தது (ஆதி 17:1). யாக்கோபு தேவனுடைய வார்த்தையை சந்தேகித்தான். தேசத்தில் பஞ்சம் வந்த போது தேவனையும் அவர் கொடுத்த வாக்குத்தத்தத்தையும் சந்தேகப்பட்டு உணவுக்காக எகிப்துக்குச் சென்றான். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறாத சூழ்நிலையில் கூட நிச்சயம் ஆபிரகாம் பஞ்சத்தில் சாகவில்லை. ஆனாலும் வாக்குத்தத்தத்தில் சற்று விலகி எடுத்த முடிவினால், யாக்கோபின் பிள்ளைகள் எகிப்தை நம்பி வாழ நேரிட்டது. எகிப்தில் யாக்கோபின் சந்ததி 430 ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தனர். ஒரு தனிப்பட்ட மனிதனின் தவறான தேர்ந்தெடுப்பு வாக்குத்தத்தம் நிறைவேற தாமதம் ஆனது. அதனால், எகிப்தியருடைய தேவர்களிடம் திரும்பும் விக்கிரக ஆராதனைக்காரர்களாக இஸ்ரவேலர்கள் மாறினார்கள் என்று எசே 20:7-9ல் வாசிக்கிறோம்.

மனிதன் மனசாட்சி, பரிசுத்த ஆவியின் கட்டுப்படுத்தும் செயல் மற்றும் மனித ஆளுகை ஆகிய இவைகளுக்கு கீழ்ப்படிய மறுத்ததால், தேவன் ஒரு மனிதனை நிர்வகிக்க இப்பொழுது ஒரு புது வழியை தேர்ந்தெடுத்தார். அதாவது ஆண்டவர் ஒரு மனிதனை தேர்ந்தெடுத்து அவனுக்கும் அவன் சந்ததிக்கும் என வாக்குத்தத்தங்களை கொடுத்தார். வாக்குத்தத்தங்களின் முக்கியத்துவம் மற்றும் அதன் மேலுள்ள தேவ செயல்கள் குறித்து கலா 3:15-22, எபி 6:13-15 ஆகிய பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளது.

முழு உலகத்தை படைத்த தேவன் தம் கவனத்தை உலகத்திலிருந்த ஒரு தேசத்தின் பக்கமாகத் திருப்பி, இஸ்ரவேல் தேசத்தைத் தெரிந்தெடுத்தார். பின்னர் அந்த தேசத்தில் ஒரு கோத்திரமாக, யூதா கோத்திரத்தை தெரிந்தெடுத்தார். பின்னர் அந்தக் கோத்திரத்தில் ஒரு குடும்பமாக ஈசாவின் குடும்பத்தை தேர்ந்தெடுத்து, இறுதியாக ஈசாயின் குடும்பத்திலிருந்து ஒரு தனிநபராக இயேசு கிறிஸ்துவை தெரிந்தெடுத்து அவர் மூலமாக வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார். ஆபிரகாம் சந்ததிகளுக்கு என்று அநேகரை குறிப்பிடாமல் உன் சந்ததிக்கு என்று ஒருவனை குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்த சந்ததி கிறிஸ்துவே என்று பவுல் கலா 3:16ல் எழுதி முடிக்கிறார்.ஆகவே பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் என்ற ஒருவனுக்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்தம் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து என்ற ஒருவராலே வாக்குத்தத்தம் அனைத்திற்கும் நாம் சுதந்தரர்களாகிறோம். நீங்கள் கிறிஸ்து வினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். கலா 3:29.

ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேற அவன் செய்த 3P-யை எபி 6:13-15ல் உள்ள வசனம் விளக்குகிறது. 1. Patience (பொறுமை) 2. Perseverance (விடாமுயற்சி) 3. Promise receive (வாக்குப்பண்ணினதை பெற்றான்) (வசனம் 15) தேவன் தம்முடைய வார்த்தையால் சொன்னதை நம்முடைய கரங்களில் நிறைவேற்ற பொறுமையுடன் காத்திருந்து பெற்றுக்கொள்வோம்.

முற்பிதாக்களின் காலத்தில் வாக்குத்தத்தம் நிறைவேற தாமதிக்கும் நேரத்தில் அநேக தவறான தெரிந்தெடுப்புகளை எடுத்தனர். அதன் விளைவாக தேவ திட்டம் தாமதமானது. நமது வாழ்வில் தேவனின் வாக்குத்தத்தமும், அவரின் வார்த்தையிலும் எவ்வளவும் சந்தேகிக்காமல் தேவ வாக்குத்தத்தைச் சார்ந்து வாழுவோம். இம்மாதம் கேரீத் இந்த வாக்குத்தத்த காலம் என்று அழைக்கப்படும் முற்பிதாக்களின் காலங்களில் தேவன் கொடுத்த வாக்குத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் குறித்து அதிகமாக தியானிப்போம். தேவ வாக்குத்தத்தம் நம்முடைய வாழ்விலும் நிறைவேறும் வரை தேவனையும் அவருடைய வார்த்தையையும் சார்ந்து வாழுவோம். அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்வோராய் நம்மையும் மாற்றுவராக. ஆமென்.

*- Bro.Selwyn*




# பாராக்

## Vezot ha'Bracha

'And This is the Blessing'

Deu 33:1-34:12, Jos 1:1-18

# Blessing ஆசீர்வாதம்?

இந்த வார்த்தையோடு தான் நம்முடைய ஜெபம் தொடங்குகிறது. அது முடியும் போதும் இதை இன்னும் தர வேண்டும் என்று கேட்டு தான் ஜெபத்தை முடிக்கிறோம்.ஆசீர்வாதம் இதன் அர்த்தத்தை நாம் சரியாக புரிந்து கொள்ள வில்லை.நாம் நினைக்கிறபடி ஆசீர்வாதம் பொருள் செல்வத்தை மட்டுமே குறிக்கிறதாய் இருந்தால், இந்த உலகத்தில் ஒரு கிறிஸ்தவன் தான் பணக்காரனாக இருக்க முடியும். உங்ளை சுற்றிப்பாருங்கள். நீங்கள் வேலைபார்க்கும் இடத்தில், படிக்கும் இடத்தில், யார் பணம் படைத்தவர்களாகவும் செல்வந்தர்களாகவும் இருக்கிறார்கள்? இதன் விடை உங்களுக்கு தெரியும். மூல மொழியில் ஆசீர்வாதத்தின் அர்த்தத்தை பார்ப்போம்.ஆசீர்வாதத்தின் எபிரெய மூலச்சொல் "பாராக்" (Bracha). பாராக் என்றால் முழங்கால் படி இடுதல்/ இறக்கி வைத்தல் என்று அர்த்தம். இவ்வாறு கற்பனை செய்து பாருங்கள். ஒரு மீனவன் கலிலேயா கடலில் மீன்களைப் பிடித்து அதை எருசலேமுக்கு சென்று விற்பதற்கு ஒரு ஒட்டகத்தின் மேல் ஏற்றி சென்றான். ஆனால், அந்த மீன்கள், அழுகி நாற்றம் எடுக்க ஆரம்பித்ததால் நகரத்தில் இருந்த மனிதர்கள் அதை துரத்த ஆரம்பித்தார்கள். பின்பு ஒரு நாளில் நகரத்திற்கு வெளியே மீன்களுடன் அந்த ஒட்டகம் இறந்து போனது. இப்படித்தான் இறக்கி வைக்கப்படாத ஆசீர்வாதமும் அழுகி நாற்றம் எடுக்க ஆரம்பித்துவிடும்.

ஆதி 12:3–ல் .... பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.

ஆதி 26: 24ல் ...என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து...

ஆதி 28:14ல் ... உனக்குள்ளும், உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்...

ஆதி 32:29ல் ... நீ என் நாமத்தை கேட்பானேன் என்று சொல்லி அங்கே அவனை ஆசீர்வதித்தார்.

இந்த வசனங்களில் மறைந்திருக்கும் ஒரு உண்மை என்னவென்றால், நம் முற்பிதாக்கள் பெரும் பொருட்செல்வம் உடையவர்களாய் இருந்த போதும், தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். அப்படியென்றால் ஆசீர்வாதம் என்பது ஏதோ உலகப்பிரகாரமான பொருளையோ, பணத்தையோ பெற்றுக் கொள்வது அல்ல.

தேவன்
வாக்குபண்ணினார்
இயேசு கிறிஸ்து
வாக்குத்தத்தத்தை
நிறைவேற்றுகிறார்.
பரிசுத்த ஆவியானவர்
வாக்குத்தத்தத்தின்
நிறைவானார்
நாம்
ஆசீர்வதிக்கப்பட்டு
மகிழ்கிறோம்

### ஆசீர்வாதம் என்பது

1. தேவனின் கிருபை (எபி 12:15,16)
2. தேவனை அறியும் அறிவு
3. தேவனின் அன்பு
4. தேவனை தேடும் மனம்
5. தேவன் அருளும் சமாதானம்
6. தேவனோடு நடக்க விரும்பும் இருதயம்
7. தேவனுக்குக் கீழ்ப்படிவது
8. தேவனுடைய சித்தத்திற்கு காத்திருப்பது
9. தேவனுடைய கரத்தில் அடங்கி இருப்பது.
10. தேவனுக்கு பயப்படும் அடுத்த சந்ததியை வளர்ப்பது.

ஆசீர்வாதம் என்பது
மேற்குரிய அனைத்தையும்
தனித்தனியே பார்க்கும்
போது,இவை அனைத்தும்
மனிதனின் சரியான
பண்புகளை குறிக்கிறதாய்
உள்ளன.ஆனால் இந்த
பண்புகளை சரியான பண்புகள்
என்ற சிறிய வட்டத்திற்குள்
அடக்கி வைக்க இயலாது.

சரி, ஒரு அறிவியல் சோதனையை செய்து பார்ப்போம். ஒரு Lens-ஐ எடுத்துக் கொள்ளுங்கள். மதிய வேளையில் அந்த Lens ஒளிக் கதிர்களை ஒன்றாக ஓரிடத்தில் குவியச்செய்யும். அவ்வாறு ஒளிக்கதிர்கள் குவிந்த இடத்தில் வெப்ப ஆற்றல் அதிக அளவில் இருக்கும் . இப்பொழுது மேற்கூரிய சரியானப் பண்புகளை சூரியனிலிருந்து வரும் ஒளிக்கதிர்களாக கற்பனை செய்து கொள்ளுங்கள். பரிசுத்த வேதாகமம் என்னும் Lens-ஐ வைத்து, இந்த சரியானப் பண்புகளை குவியச் செய்தால் உருவாகும் வெப்ப ஆற்றல் தான் கிறிஸ்து.ஆம்! நண்பர்களே நாமும் ஆபிரகாமை போல் ஒரு அனல் உள்ள வாழ்க்கை வாழ ஆசீர்வாதமாகிய "கிறிஸ்து நமக்கு தேவை".

உலக பிரகாரமாய் ஆசீர்வதாதமாக இருப்பவர்கள் தம்முடைய ஐசுவரியத்தை அவர் அணிந்திருக்கும் நகைகள், அவர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் மற்றும் தொலை தொடர்பு சாதனங்களை வைத்து வெளிப் புறமாக அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதை காண்பிப்பார்கள். அதேபோல் நாம் பெற்றிருக்கிற ஆசீர்வாதம் கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் மேற்காணப்பட்ட குணாதிசயங்களையும் நம் அன்றாட வாழ்வில் வெளிகாட்ட வேண்டும். நம்முடைய சிந்தை, வார்த்தை, நடக்கை, பேச்சு எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் ஆசீர்வாதம் பெற்றவர்களாய் காணப்பட வேண்டும்.அதற்கு கிறிஸ்து நமக்கு தேவை. அவரோடு நாம் வைத்திருக்கும் நெருக்கமான உறவும் நமக்குத் தேவை. இதுவே ஆசீர்வாதம் என்பதின் அர்த்தம் அதை நாம் சரியாக புரிந்து கொண்டு கிறிஸ்துவை நம்முடைய வாழ்வில் வெளிக்காட்டும் நடமாடும் நிருபங்களாய் வலம் வர வாழ்த்துகிறோம்.

– Mr.Jerome Stanley

1ம் வார தேவ வார்த்தை

# ஆபிரகாம்

## தேசங்களுக்கு ஆசீர்வாதம்



''இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம்'' என்று எண். 24:1 ல் எழுதப்பட்டுள்ளது. நம்மை ஆசீர்வதித்து நம் மூலமாக, நம் தேசமும், நம்மை சுற்றியுள்ள தேசங்களும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதே ஆண்டவருடைய சித்தம். தனி ஒரு மனிதன் மூலமாக, உலகத்தின் பல நாடுகள் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளன. அதற்கு நல்லதோர் உதாரணம் ''ஆபிரகாம்'' .கி. மு. 1996ஆம் ஆண்டு இன்றைய ஈராக் தேசமான கல்தேய பட்டணத்தை சேர்ந்த ''ஊர்'' எனப்பட்ட ஊரில் பிறந்து வளர்ந்த ஆபிராமை (உயர்வான தகப்பன்) திரளான ஜனங்களுக்கு தகப்பன் என்று பொருள்படும் ஆபிரகாம் என்று ஆண்டவர் பெயரிட்டு அழைத்தார். 75 வயதிலும், ஒரு குழந்தை கூட இல்லாத தனி ஒரு மனிதனைப்பார்த்து, ஆண்டவர் நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து.... பெருகவே பெருகப்பண்ணுவேன் (ஆதி 22:17) என்கிறார். அவனுக்கு கீழ்கண்ட 7 பரிபூரணமான ஆசீர்வாதங்களை வாக்களிக்கிறார்.

### அவனுக்கு கீழ்கண்ட 7 பரிபூரணமான ஆசீர்வாதங்களை வாக்களிக்கிறார்.

1. உன்னை பெரிய ஜாதியாக்குவேன் (ஆதி 12:2)
2. உன் பேரை பெருமைப்படுத்துவேன் (ஆதி 12:2)
3. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் (ஆதி 12:2)
4. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன் (ஆதி 12:3)
5. உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன் (ஆதி 12:3)
6. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி 12:3)
7. உன் சந்ததிக்கு (நீ நடந்து திரிந்த) இந்த தேசத்தை கொடுப்பேன் (ஆதி 12:7, 15:21).

இந்த 7 ஆசீர்வாதங்களில் தனி ஒரு மனிதனுக்கும் (ஆபிரகாமிற்கு) ஒரு நாட்டிற்கும் (இஸ்ரேல்), உலக நாடுகளுக்கும் என மூன்று விதமான ஆசீர்வாதங்கள் அடங்கியுள்ளன.

### தனி ஒரு மனிதன் மூலம் முழு உலகிற்குமான (universal) ஆசீர்வாதங்களை 3 முறை வாக்குக்கொடுக்கிறார்.

1. ஆதி 12:3ல் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் (all people on earth) ஆசீர்வதிக்கப்படும்.
2. ஆதி 18:17ல் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் (all nations on earth) ஆசீர்வதிக்கப்படும்.
3. ஆதி 22: 18ல் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் (all nations on earth) ஆசீர்வதிக்கப்படும்.

இந்த மூன்று முறையும், ஆபிரகாமின் வாழ்வில், அவன் சந்தித்த மூன்று முக்கியமான சூழ்நிலைகளில் ஆண்டவர் இந்த வாக்குறுதிகளைக் கொடுக்கிறார். முதல்முறை ஆபிரகாம், ஆண்டவருடைய அழைப்பிற்கு எந்த ஒரு கேள்வியும் கேட்காமல் தன் வாழ்வில் ஓர் நிபந்தனையற்ற கீழ்படிதலை வெளிப்படுத்திய சூழ்நிலையில் மேற்கண்ட வாக்குறுதியை ஆண்டவர் கொடுக்கிறார். நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போ (ஆதி 12:1) என்று கட்டளையிட்ட போது, கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னபடியே, அவன் புறப்பட்டுப்போனான் (ஆதி 12:4). ஆண்டவரால் ஆபிரகாம் அழைக்கப்பட்ட போது, ''கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டு போனான்'' எபி 11:8ல் வாசிக்கிறோம்.

### 1. நிபந்தனையற்ற கீழ்ப்படிதல்:

நம் தேசத்திற்கும், நம்மை சுற்றியுள்ள தேசங்களுக்கும் நம்மை ஆசீர்வாதமாக ஆண்டவர் பயன்படுத்தப்பட வேண்டுமானால், ஆபிரகாமை போல நமக்கும் நிபந்தனையற்ற கீழ்படிதல் தேவை. ஆண்டவர் நம்மை அழைக்கும் போது, பூரணமாய் அவருக்கு கீழ்ப்படிந்து, அவர் காட்டும் இடமெல்லாம் செல்ல பின் திரும்பாது நான் நிற்க, ஏற்றுக்கொள்ளும், என்னை ஏற்றுக்கொள்ளும் என்ற பாடல்வரிகளுக்கேற்ப நம்மையே நாம் கையளிப்போமாக.

### 2. நிலைவரமான உறவு:

இரண்டாவதாக ஆண்டவர் சோதோம் பட்டணத்தின் அழிவை குறித்து, ஆபிரகாமிற்கு வெளிப்படுத்திய போது, பட்டணத்தை அழிக்காதபடி, ஆண்டவரின் சந்நிதியில் பரிந்து பேசும் ஜெபத்தோடு நின்று கொண்டிருக்கும் சமயத்தில் மீண்டும் ஆண்டவர் தனது வாக்கை நினைப்பூட்டுகிறார் (ஆதி 18:17). ஆபிரகாம் ஓர் ஜெப வீரன்.ஆண்டவருடன், ஓர் நிலைவர மான உறவு கொண்டவன்.அவன் செல்கிற இடமெல்லாம் பலிபீடத்தைக் கட்டி, ஆண்டவரை தொழுது கொண்டான் (ஆதி 12:7,8,13:4,18,15:10,21:33,22:8) என்று 7 இடங்களில் வாசிக்கிறோம். ஆபிரகாமைப்போல ஜெபவாழ்வில், ஆண்டவருடைய நிலையான உறவு கொண்டுள்ள தனி மனிதர்களேயே, அவன் வாழும் தேசத்திற்கும் உலகத்தி ற்கும், ஆசீர்வாதமாக பயன்படுத்தி வந்துள்ளார். ''உம்மோடு எந்நாளும் உறவாட அருள் செய்யுமே'' என்று நம்மை நாம் ஒப்புக்கொடுப்போமாக!

### 3. நிகரற்ற விசுவாசம்:

மூன்றாவதாக, ஆண்டவர் ஆபிகாமுக்கு தனது 100வது வயதில் கொடுத்த, ஒரே குமாரனை பலி கொடுத்திடவும் தயங்காது துணிந்து மோரியா மலையிலே நின்ற போது, மீண்டும், உனக்குள் ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படும் என்பதை உறுதி செய்கிறார். தனது ஒரே குமாரனை தகனபலியாகக் கொடுத்தாலும், ஆண்டவர் தான் கொடுத்த வாக்கின்படி, என் சந்ததியை பெருக செய்ய வல்லவர் என்று விசுவாசித்த ஆபிரகாமின் நிகரற்ற விசுவாச வீரர்களை ஆண்டவர் பல தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக்கிட முடியும்.

இரட்சிப்பாகிய ஆசீர்வாதத்தை அவருக்குள் கிடைக்க பெற்றவர்களாகிய நாம், இந்த ஆபிரகாமின் சந்நிதியில் வந்தவராகிய, ''மீட்பராகிய இயேசு கிறிஸ்து'' மூலம் உலக முழுவதற்குமான விசுவாசத்தில் உறுதி கொள்வோம். நம் தேவனுக்கும், இந்த தேசத்திற்கும் ஆசீர்வாதமாக வாழ்ந்திட நம்மை நாமே அர்பணிப்போம்.

ஆபிரகாமின் தேவனுக்கு நிபந்தனையற்ற கீழ்படிதலுடன், அவருடன் நிலையான உறவு கொண்டு அவருக்காய் நிகரற்ற விசுவாச வீரர்களாய் நாமும் எழும்பிட, நாமும் இன்னும் பலரையும் எழும்பிட தேசத்திலும், நம்மை சுற்றியுள்ள பிற தேசங்களுக்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்திட ஜெபிப்போம்.

Rev.John David Raj



# குழியிலிருந்து கோபுரத்திற்கு...

## PIT TO PALACE

**யோசேப்பு:**
**புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் நிழலாய் இவர்களுக்கு இடையே அநேக ஒற்றுமைகள் உண்டு.**

- இரண்டு பேரும் தகப்பனால் நேசிக்கப்பட்டவர்கள்.
- இருவரும் தங்களை ஒரு மேய்ப்பனாக கருதினர்.
- இருவரும் தங்கள் தகப்பன்மார்களால் சகோதரர்களுக்காக அனுப்பப்பட்டவர்கள்
- காரணமே இல்லாமல் தங்கள் சகோதரர்களால் வெறுக்கப்பட்டனர்.
- தங்கள் சகோதரர்கள் இருவருக்கு விரோதமாக சதிகள் தீட்டினர்.
- இருவரும் சோதிக்கப்பட்டனர்.
- இருவரும் எகிப்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்
- இருவரின் ஆடையும் களையப்பட்டது.
- இருவரும் கட்டப்பட்டனர்.
- இருவரும் பாடுகள் அனுபவிக்கும் போது, மௌனமாக இருந்தனர்
- இருவரும் செய்யாத தப்பிற்காக குற்றஞ்சுமத்தப்பட்டனர்.
- இருவரும் தேவ பிரசன்னத்தை தங்கள் பாடுகளில் உணர்ந்தனர்.
- இருவரும் தங்கள் காவலாளர்களால் மதிக்கப்பட்டனர்.
- இருவரும் வேறு இரு குற்றவாளிகளோடு இருந்தனர் அதில் ஒருவர் கொல்லப்பட்டர், மற்றொருவர் காப்பாற்றப்பட்டார்.
- இருவரும் தங்கள் ஊழியத்தை ஆரம்பிக்கும் போது 30 வயதுடையவர்களாக இருந்தனர்.
- தங்கள் பாடுகளுக்கு பின் இருவரும் உயர்த்தப்பட்டனர்.
- இருவரும் சில காலங்கள் தங்கள் சகோதரர் களால் மேற்கொள்ளப்பட்டனர்.
- இருவரும் தங்கள் சகோதரர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டனர்.
- இருவரும் உல நாட்டத்தவர்களால் சந்திக்கப்பட்டனர்.

வேதத்தில் இரண்டாம் நிலையாகிய (2nd Stage) முற்பிதாக்களின் காலத்திற்கு மற்றும் ஒரு பெயர் உண்டு.அதுதான் வாக்குத்தத்தத்தின் காலமாகும். தேவன் நம் முற்பிதாக்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களை தந்தார்.தந்தது மாத்திரம் அல்ல.அவர் வாக்கு மாறாதவர் எனவே வாக்குகளை நிறைவேற்றினார் ,நிறைவேற்றுகிறார்,நிறைவேற்றுவார்.அதில் நம் முற்பிதாவாகிய யோசேப்புக்கும் தேவன் ஒரு கனவின் மூலம் வாக்குத்தத்தம் செய்தார். அது அவன் ஒரு ஆளுகைச் செய்பவனாக இருப்பான் என்பதே. ஆனால் அவன் அந்த நிலைக்குச் செல்லுமுன் அநேக கட்டங்களைக்கடக்க வேண்டும் என்பதை அவன் உணர வில்லை. தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்று மகிழ்ச்சியோடு யோசேப்பு என்று ராகேல் தன் மகனுக்கு பெயரிட்டாள். இந்த யோசேப்பு. தன் சகோதரர்களால் வெறுக்கப்பட்டும் தகப்பனால் அதிகமாய் நேசிக்கப்பட்டான்.

அதின் விளைவாக அவன் சகோதரர்கள் அவனை குழியில் (Pit) போட்டனர்.அந்த குழிக்குள் கிடந்தான். இதோடு அவன் வாழ்வில் பாடுகள் நிற்கவில்லை. அவன் சகோதரர்கள் அவனை எகிப்தியர்களிடம் விற்றுப்போட்டனர். அவன் குழியில் (Pit) இருந்து போத்திப்பாரின் அரண்மனைக்கு (Potiphar) கொண்டு செல்லப்பட்டான். அங்கு யாரும் அவனை கண்காணிக்க இல்லாத இடத்திலும் "தேவனுக்கு விரோதமாக பாவம் செய்வது எப்படி" என்று தன் நிலையில் உறுதியாக நின்றான்.ஆனால் அதற்கு பலனாக சிறைச்சாலையில் (Prison) போடப்பட்டான்.தேவன் அவனுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்திற்கும் அவனை வாழ்வில் நடக்கும் காரியங்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கும் சூழ்நிலையிலும், இச்சம்பவம் ஆதியாகமம் 39ல் வாசிக்கிறோம்.இவ் வதிகாரத்தின் முடிவில் வசனம் 21,23ல் கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும்... சிறைச்சாலை தலைவன் விசாரிக்கவில்லை என்று முடிவடைகிறது.

தேவன் யோசேப்பை ஆளுகைச் செய்ய அழைத்து சென்றப்பாதை கடினமாய் இருந்தாலும், அவர் அவனோடு கூடவே இருப்பதை அவன் உணர்ந்து எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான். சிறைச்சாலையில் 2 வருடங்கள் இருக்க வேண்டிய சூழ்நிலையில் மனிதனை நம்பியிருந்ததால் கைவிடப்பட்டான். தேவன் யோசேப்பின் வாழ்வில் தாம் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேற்ற வேண்டிய வேளை வரும் அளவும் காத்திருந்தார்.அவர் வேளை வரும் போது, சிறைச்சாலை அவனை கொள்ளவில்லை.ராஜாவின் சொப்பனத்திற்கு விளக்கம் சொல்ல செய்து தேவன் தந்த வாக்குதத்தத்தை நிறைவேற்றும் வண்ணம் (ஆதி 41:40) "நீ என் அரமணைக்கு அதிகாரியாயிருப்பாய்..." என்று தலைகுனிந்த இடத்தில் யோசேப்பை தேவன் தலைநிமிர செய்தார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு தம்பி, தங்கையே தேவன் உனக்கும் பல வாக்குகளை கொடுத்திருப்பார்.வாக்குக் கொடுத்தவர் உண்மையுள்ளவர்.அவர் சற்றும் பொய்யுரையாத தேவன்.வாக்குத்தத்தங்கள் நிறைவேறாதது போல சூழ்நிலைகள் மாறலாம்.ஆனாலும் அவர் தன் வேளைக்காய் காத்திருக்கிறார். "God is always on time" நமக்கு அது தாமதம் போல் தோன்றலாம்.ஆனால் அவர் வேளைக்காய் காத்திருப்பதால் குழி போன்ற (Pit) போர்த்திபாரின் அரண்மனை அனுபவங்கள் (Potiphar) போன்ற, சிறைச்சாலை போன்ற (Prison) சூழ்நிலைகளை ஆசீர்வாதமாய் மாற்றும் தேவன் உன்னோடு உண்டு.ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் என்று 1பேதுரு 5:6ல் எழுதியிருக்கிறது போல உன்னை அரண்மனை(Palace) அனுபவங்களுக்குள் உயர்த்துவார்.



- Sis.Mercy Selwyn

Bible Reading Method

# The Sandwich Scripture




வேதாகமத்தில் மொத்தம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு. 6 பிரிவுகள் உண்டு.
2 பெரும் பிரிவுகள் உண்டு.

**பழைய ஏற்பாட்டின் பிரிவுகள் 4:**

1. சட்ட புத்தகங்கள் பிரிவு: -187 அதிகாரங்கள்
ஆதியாகமம் முதல் உபாகமம் வரை 5 புத்தகங்கள்.
2. வரலாறு புத்தகங்கள் பிரிவு: 249 அதிகாரங்கள்
யோசுவா முதல் எஸ்தர் வரை 12 புத்தகங்கள்-
3. பாடல்/கீத புத்தகங்கள் பிரிவு -243 அதிகாரங்கள்
யோபு முதல் உன்னதப்பாட்டு வரை 5 புத்தகங்கள்
4. தீர்க்கதரிசன புத்தகங்கள் பிரிவு -250 அதிகாரங்கள்
ஏசாயா முதல் மல்கியா வரை 17 புத்தகங்கள்

**புதிய ஏற்பாட்டின் பிரிவுகள் -2**

1. வரலாறு புத்தகங்கள் பிரிவு -117 அதிகாரங்கள்
மத்தேயு முதல் அப்போஸ்தலர் வரை 5 புத்தகங்கள் -
2. கடிதங்கள் பிரிவு - 143 அதிகாரங்கள்
ரோமர் முதல் வெளிப்படுத்தின விசேஷங்கள் வரை 22 புத்தகங்கள் -

வேதத்தில் மொத்தம் 1189 அதிகாரங்கள்.அதில் பழைய ஏற்பாட்டில் 929 அதிகாரங்கள்,புதிய ஏற்பாட்டில் 260 அதிகாரங்கள். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வாசிப்பதில் இயேசு மற்றும் பவுலை முன் மாதிரியாக கொள்வோம்.

பவுல் தனது கடிதங்களில் தனது கருத்தைச் சொல்ல பழைய ஏற்பாட்டின் 4 பிரிவுகளிலிருந்தும் குறிப்பிட்டுள்ளார். அதிலிருந்து தினமும் அவர் பழைய ஏற்பாட்டின் 4 பிரிவுகளையும் வாசித்திருப்பார் என்று அறியலாம். இயேசுவும் தனது போதனைகளில் 4 பிரிவுகளிலிருந்தும் எடுத்து பேசுகிறார். அதனால் அவரும் அப்பழக்கம் கொண்டிருப்பார் போலும். பழைய ஏற்பாட்டின் 5 புத்தகங்களைத் தவிர மற்ற அனைத்து புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த 5 புத்தகங்களின் செய்திகூட புதிய ஏற்பாட்டில் உள்ளது. எடுத்துக்காட்டாக, உன்னதப்பாட்டு புத்தகம் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் உன்னதப்பாட்டு 2:25 (தேவன் இல்லாமல் சந்தோஷம் இல்லை)என்பதைஇயேசு,யோவான்10:10ல்இயேசுவோடுஉறவிருந்தால் மட்டுமே நித்திய ஜீவனை பெறலாம் என்று அடிகோடிட்டுள்ளார். இயேசு தாமே, 24 பழைய ஏற்பாட்டு புத்தகங்களை, புதிய ஏற்பாட்டில் உபயோகித்துள்ளார்.

அதனால் தினமும் பைபிளின் எல்லா பிரிவுகளில் இருந்தும், வாசிக்கும் பழக்கத்தை கொள்வோம்.அது ஒரு ருசியான அனுபவம் போல் இருக்கும். சாப்பிடுவது போல சுவையாக இருக்கும்.



120 நாட்களில்
முழு வேதத்தையும்
வாசித்து முடிக்க,
ஒரு நாளைக்கு
10 அதிகாரங்கள்
வாசிக்க வேண்டும்.
பழைய ஏற்பாட்டு
பிரிவுகளில்
ஒவ்வொன்றிலும்
1 அதிகாரம் வாசிக்க
வேண்டும்.

வேதம் வாசிக்கும் முறைகளில் ஒன்று- BIBLE முறை.

B-Bend your knees (சங்.119:18)
வாசிக்கும் முன் ஜெபியுங்கள்.
I- Immense yourself (யாக்கோபு 1:25)
முழு கவனத்தோடு பைபிள் வாசியுங்கள்.
B- Brains form (லூக்கா 10:16) புரிந்து கொள்ளுதலோடு வாசிப்பதோடு, நடைமுறையோடு ஒப்பிடுங்கள்.
L- Live it (யாக்கோபு 1:23)
வாசித்ததை வாழ்க்கையில் செயல்முறை படுத்துங்கள்.
E-Express it (எரேமியா 51:59-64)
நீங்கள் வாசித்ததை பிறருக்கு கற்று கொடுங்கள்.
மேலுள்ள 5 காரியங்களை பின்பற்றினால் நீங்கள் சீக்கிரம் வேதப்பிரியர் ஆகி விடுவீர்கள்.

"King James Bible" - 1611ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டு, உலகிலேயே அதிகளவில் அச்சடிக்கப்பட்ட புத்தகமாக உள்ளது. The only book with one billion copies in print.

MEMORIZE THE BIBLE :Thomas Cranmer (1489 - 1556) the arch Bishop of Canterbury, memorized the entire Bible in just three months. Just amazing!!

DO YOU KNOW? Longest name mentioned in the Bible is in Isaiah 8:1 - Mahershalalhash baz

SCIENTIFIC BIBLE

Bible has revealed many facts about science. Even before man discovered telescopes, microscopes and scuba divers:

No moon light - Job 25:5
Light travels - Job 38:19
Stars can't be counted - Genesis 15:5, 22:17
Cosmic light - Gen.1:3, Psa.74:16
Empty place in North - Job 26:7
Sound waves from stars - Job 38:7
Pleiades star cluster - Job 38:31
Sea Mounts - Jonah 2:3-6
Submarine Canyons - II Sam 22:16
Ocean Currents - Psa.8:8
Earth not flat - Isa.40:22

- KTM

# சோதாம் விட்டு ஓடு....

சோதாம் மற்றும் கொமோரா அவர்களின் கடுமையான பாவங்களுக்காக அழிக்கப்பட வேண்டும் என்று கடவுள் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்துகிறார் (ஆபி 18:20). ஆபிரகாம் அங்கு வாழும் எந்த நீதியுள்ள மக்களின் வாழ்க்கையையும், குறிப்பாக அவரது மருமகன் லோத்து மற்றும் அவரது குடும்பத்தினரின் வாழ்க்கைக்காகவும் ஆண்டவரிடம் மன்றாடுகின்றார். நீதிமான்களை காண முடிந்தால் நகரங்களை அழிக்கமாட்டேன் என கடவுள் ஒப்புக்கொள்கிறார் (18:23-32) இரண்டு தேவதூதர்கள் சோதோமில் உள்ள லோத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். லோத்தையும் அவருடைய குடும்பத்தினரையும் மட்டுமே நீதியுள்ளவர்களாகக் கண்டறிந்து அந்த சோதோமை விட்டு அவர்களை வெளியேற்றுகிறார்.சோதோம் மற்றும்கொமேரா ஆகிய இரண்டுபட்டணங்களையும், இழிவான பாவம் நிறைந்த நகரங்கள் என்பதால் அவற்றின் துன்மார்க்கத்தின் காரணமாக கந்தகமும் நெருப்பு கொண்டு அழிக்கப்பட்டது என்று ஆதியாகமத்தில் நாம் காண்கிறோம். பாவத்தின் சம்பளம் மரணம் என்று ரோமர் 6:23 இல் குறிப்பிட ப்பட்டுள்ளது.

நாமும் நம்முடைய பாவங்களை விட்டு வெளியே வராவிட்டால் நமக்கு கூலியாக மரணம் அளிக்கப்படும் மாறாக, நாம் நம்முடைய பாவங்களை விட்டு வெளியே வந்து நீதியுள்ளவர்களாய் வாழ்ந்தால் ஆண்டவர் மிகவும் மகிழ்ச்சியடைவார்.இதை தான் என் குழந்தைகள் சத்தியத்தில் நடப்பதைக் கேட்பதை விட பெரிய மகிழ்ச்சி எனக்கு இல்லை என்று ஆண்டவர் 3 யோவான் 1:4ல் கூறியுள்ளார். அதற்கு பரிசாக நித்திய ஜீவனை ஆண்டவர் தருவார். பெருமை, பேராசை, காமம், பொறாமை, பெருந்தீனி, கோபம் மற்றும் சோம்பல் இவை ஏழுமே நல்லொழுக்கத்திற்கு எதிரான பாவங்கள் ஆகும். பொதுவாக மூன்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். கண்களின் இச்சை. மாமிசத்தின் இச்சை மற்றும் ஜீவனின் பெருமை ஆகும்.முன்பு சொல்லப்பட்ட ஏழுமே இந்த மூன்றின் கீழ் வகைக்கலாம்.

இந்த பாவங்களை விட்டு ஓடுவதற்கு வழிகள் உள்ளதா?
எப்படி இந்த பாவங்களை விட்டு ஓடுவது?

## A - Analyse your sins:

நாம்நம்மைஒவ்வொருநாளும்சுயமதிப்பீடுசெய்துகொள்ள வேண்டும்.நமது நோக்கங்கள், முடிவுகள் மற்றும் நமது செயல்கள் பற்றியும் நமக்கு நுண்ணறிவு இருக்க வேண்டும்.அப்பொழுது தான் அப்பாவங்களில் இருந்து விடு பட முடியும்.நம் இதயத்தையும் மற்றும் நம் சிந்தையையும் ஆட்கொள்ளும் சில பாவங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். எரேமியா தீர்க்கதரிசி சொல்கிறார். நம் வழிகளை சோதித்துப் பார்த்து கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம். (புலம்பல் 3:40)

நம்முடைய பாவம் எப்படி நமக்குள் வந்தது. நம்முடைய பாவத்திற்கு எந்தெந்த வழிகளில் நாம் கதவுகளை திறந்து கொடுக்கிறோம்?நம்முடைய பாவத்தை தடுக்க ஏதாகிலும் முயற்சி எடுக் கிறோமா இல்லையா? என்றெல்லாம் நாம் நம்மை சோதித்து பார்க்க வேண்டும்.

## B - Block your Sins:

ஆரம்பகட்டத்திலேயே தீய பழக்கத்தை தவிர்க்க விட்டால்,அது பழுத்து, அதன் விதை மற்றொரு தீய தாவரத்தை உருவாக்கும். அது போலத்தான் பாவத்தை அதன் ஆரம்பத்திலேயே விட்டுவிடாவிட்டால், அது வளர்ந்து மற்ற பாவங்களுக்கு வழிகளை உண்டு பண்ணும் பாவத்தை எப்படியெல்லாம் தடுப்பது?

Resist: பாவத்தை எதிர்த்து நிற்க வேண்டும். அதாவது அது மகிழ்ச்சியையே தந்தாலும், அது நன்றாகவே தோன்றினாலும் அதை மீண்டும் அனுமதிக்காமல் அதை எதிர்க்க வேண்டும்.

Reject: பாவத்தை அல்லது பாவ உணர்வை துண்டிக்கிற எல்லா சூழ்நிலைகளையும் எல்லா நண்பர்களையும் நாம் நம்முடைய வாழ்க்கையில் இருந்து வெளியேற்ற வேண்டும். அனைத்தும் நமக்கு இனிப்பான உயிர்கொல்லி மருந்துகள் ஆகும்.

Repent: பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். நம்முடைய பாவங்களை விட்டு விலகின பின்பும் அதே பாவத்தை குறித்த எண்ணம் கூடாது அதை மனதிலிருந்து வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் இல்லை என்றால் மீண்டும், மீண்டும் அது வளர்ந்து கொண்டே தான் இருக்கும்.

Review: மனதைப் புதுப்பிக்க வேண்டும்.பாவம் சென்ற பின்பு அந்த இடம் காலியாக இருந்தால் இன்னும் பல பாவங்களுக்கு அது இடமாக கூடும் அதனால் நாம் நம் மனதை புதிய நல்ல காரியங்களுக்காக அதை தயார்படுத்த வேண்டும்.

Reverse: பாவ சிந்தனைகள் தோன்றினால் அதை விட்டு விலகி அதற்கு மாறான நல்ல சிந்தனைகளை நினைக்க வேண்டும்.

Reliable: பாவ சிந்தனைகள் தோன்றினால் அதை விட்டு விலகின பின்பு அதில் நம்பகத்தன்மையுடன் இருக்க வேண்டும். மீண்டும் அதே பாவத்திற்கு வழிவகுக்காமல் இருக்க வேண்டும்.

## C - Captivate your sins:

நாம் நம் பாவங்களை சிறைப்பிடிப்பது என்பது நம்முடைய பாவத்தை வளரவிடாமல் தடுத்து அதை நாம் கட்டுப்படுத்துவதே ஆகும். நம் எண்ணங்களின் மீது கட்டுப்பாடு நமக்கு மாத்திரம் உண்டு. கடவுள் தன் மனதை சரியான விஷயங்களில் கவனம் செலுத்தும் படி எச்சரித்தார். ஆனால் காயீன் தவறான வியங்களைப் பற்றி சிந்திக்க தேர்ந்தெடுத்தார். கோபம் மற்றும் பொறாமை இது அவரை கொலைகார செயல்களுக்கு வழிவகுத்தது. அதை போன்று தான் நாம் நம் மனதில் வைத்திருப்பது நம்முடைய நினைவை பாதிக்கிறது. நாம் என்றோ பார்த்த ஒரு பயங்கரமான திரைப்படங்களை நினைவில் வைத்துக் கொண்டு, பின்னர், பேய் கனவுகள் வருகிறது? என்று பயந்து புலம்பிய காலங்கள் உண்டு. கனவுகளைத் தவிர்ப்பதற்கான வழி அந்த மாதிரியான திரைப்படத்தைப் பார்ப்பதை நிறுத்துவதே. அதை உணர நமக்கு அதிக நேரம் தேவையில்லை. அதேபோல் தான் பாவத்தில் இருந்து மீள்வதற்கும் நமக்கு அதிக நேரம் தேவையில்லை. நாம் பாவத்தின் காரணங்களை கண்டறிந்து அதை கட்டுப்படுத்தினால் நாம் நம் பாவத்தை மேற்கொள்ளலாம். ஆரோக்கியமற்ற எண்ணங்களையும் நடத்தைகளையும் கட்டுப்படுத்தினாலே போதும் பாவத்தை வென்றிடலாம். நாம் தேடும் சுக கட்டுப்பாட்டைப் பெறவும் கடவுள் ஒரு வழியை வழங்கியுள்ளார். அது நம்முடைய பாவத்தை அவருடைய பெலத்தினாலும் ஆவியினாலும் வெல்லுவதே ஆகும்.

## D - Dominate your sins:

Hidden sins மறைமுகமான பாவம் ஒருவரின் மனதில் ஆதிக்கம் செலுத்தும் உறுதிப்படுத்தப்படாத பாவம் நம்மை உணர்ச்சி ரீதியாக பாதிக்கிறது மட்டுமல்லாமல், அது மனரீதியாகவும் பாதிக்கும், தாவீது ராஜா தான் மறைத்து வைத்திருந்த பாவத்தை எப்போதும் எனக்கு முன்பாக இருப்பதாக விவரித்தார். ஒரு வருடத்திற்கு மேல் குற்றஉணர்வு தாவீதை அலைகழித்தது, ஆகையால் பாவம் நம்மிடம் அதன் ஆதிக்கத்தை காட்ட அனுமதிக்காமல் இருக்க வேண்டும். அதற்கு நாம் பாவத்தை உண்மையாக மனரீதியாக அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும்.இல்லையென்றால் அது குற்ற உணர்ச்சியின் வடிவில் நம்மை அடிமைப்படுத்தும்.

Hidden desires: சில நேரங்களில் நம்முடைய நினைவிற்கே அறியாத ஆசைகள் நம்மை பாவத்திற்கு அழைத்து செல்லும். இது போன்ற மாம்சீக ஆசைகள் தோன்ற காரணம் நம்முடைய வாழ்க்கையில் நாம் எதற்கு முதலிடம் கொடுக்கிறோம் என்பதை பொறுத்துதான். இந்த மறைமுகமான பாவத்தையும் மறைமுகமான மாம்ச ஆசைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும் அதை எப்படி மேற்கொள்ளுவது?

Reflect it கடவுளுடைய வார்த்தையை வாசிப்பது மட்டுமல்லாமல் அதன்படி நமக்க வேண்டும்.அப்பொழுது நாம் எல்லாவற்றிலும் வெற்றியை காணலாம்.

இவைகளை நாம் கடைப்பிடித்தாலே பாவ வாழ்க்கையாக சோதோமிலிருந்து நாம் விலகி ஆண்டவர் விரும்பும் நீதிமான்களாக வாழக்கூடும்.




- Ms.Sureka

# ஏற்ற வாழ்க்கை துணை?

*How to Choose the Right life Partner*

வாழ்க்கை என்றால் என்ன? "It is the outcome of all your choices" (நம்முடைய தெரிந்தெடுப்புகளை மொத்தம் கூட்டினால் அது தான் வாழ்க்கையாகும்) என்று கூறுவர். நாம் காலை எழும்புவது முதல் இரவு நித்திரைக்கு செல்லும் வரை பல Choices-யை செய்கிறோம். சில வாழ்கையில் மிக முக்கியமான Choices-ஆக இருக்கும். அதில் ஒன்றுதான் வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பது. ஏனென்றால் மீதம் நாம் வாழப் போகும் நாட்கள் முழுவதும் அந்த ஒரு நபருடன் கழிக்க போகிறோம். எனவே அது Right choice ஆக இருப்பது மிக அவசியம். இதைத்தவறாக தெரிந்தெடுத்து விடுவோம் என்ற பயத்தில் ஒரு கூட்டவாலிபர்கள் தங்களுக்கு திருமணம் என்ற ஒரு பந்தமே வேண்டாம் என்று எண்ணுகிறார்கள். முடிவும் எடுத்து விடுகிறார்கள். இயேசுவை நேசித்து அவர் சித்தத்தின் மையத்தில் இருப்போமானால் நாம் Wrong choices எடுத்துவிடுவோம் என்ற பயம் நமக்கு வேண்டாம். Jim Eliot என்ற தேவனுடைய மனிதன் கூறுகிறார். "God always gives the best to those who leave the choice to Him" வாழ்க்கைத்துணையைத் தெரிந்தெடுக்கும் முன்னால் நாம் சிந்தனையில் கொள்ள வேண்டிய இரண்டு காரியங்கள். 1. தேவசித்தம். 2. தேவ நேரம். இவை இரண்டும் சரியாக நம் வாழ்க்கையில் நடந்தால் நாம் தெரிந்தெடுப்பைக் குறித்து கவலைப்பட வேண்டாம். இவை இரண்டையும் எவ்வாறு அறிந்து கொள்வது என்பது பலவாலிபர்களின் கேள்வியாகும். ரோம 12:2 நீங்கள் இந்த....தேவனுடைய நன்மையும் (Good), பிரியமும் (Pleasing), பரிபூரணமான சித்தம் (Perfect) இன்னதென்று பகுத்தறியத்தக்க உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூப மாகுங்கள். வாழ்க்கைத்துணையை தெரிந்தெடுக்க இவ்வுலகத்தார் பின்பற்றும் முறை கலர், உயரம், பணம், அந்தஸ்து, குலம், கோத்திரம், வேலை போன்றவற்றை பார்த்து பெற்றோர் தாங்கள் பிள்ளைகளுக்கு முடிவெடுப்பது ஒரு பக்கம். வெறும் தோற்றம், திறமை மற்றும் பணத்தை மட்டும் பார்த்து, ஏதோ ஒரு Social media தளத்திலோ, எங்கேயோ பார்த்து தங்களுக்கு இவர்தான் வேண்டுமென்று முடிவெடுக்கும் இளைஞர்கள். மற்றொரு பக்கம் இதன் விளைவு அநேக திருமணங்கள் விவாகரத்துகளில் முடிவடைகின்றன. நீங்கள் வாழ்க்கைத்துணையை தெரிந்தெடுக்க சில நடைமுறை ஆலோசனைகள்

**PRAYER AND GOD'S WILL:**

1. உங்கள் எதிர்கால வாழ்க்கைத்துணைக்காக நீங்கள் இளம் வாலிபராக இருக்கும் போதே ஜெபிக்க ஆரம்பிக்கலாம். ஆனால் ஏதோ ஒரு நபரை மனதில் வைத்துக் கொண்டு ஜெபிக்கக் கூடாது. தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். தேவன் உங்களையும் உங்கள் பெற்றோரையும் சரியான நபருக்கு நேராய் வழிநடத்த ஆதி 24:48ஐ வாக்குதத்தமாய் கொண்டு ஜெபிக்கும் போது தேவன் உங்களை அழகாய் நடத்துவார். பெற்றோரிடம் இது வேண்டாம் அது வேண்டாம் என்று கூறி, வீட்டில் சமாதானத்தை குலைக்காமல், தேவனிடம் எனக்கு என்று இல்லாத மற்ற வழிகளை நீங்களே அடைத்து விடுங்கள் என்று ஜெபிக்கலாம். தேவன் உங்களுக்கு சமாதானத்தை கொடுத்தால் தேவசித்தம் என்று எடுத்துக் கொள்ளலாம்.
2. தெரிந்தெடுப்பில் முதல் நாம் பார்க்க வேண்டியது, அந்த நபர் ஆலயத்திற்கு செல்பவராக, தேவனை நேசிப்பவராக இருக்க வேண்டும். துணையை தெரிந்தெடுக்கும் முன் சபையில் அந்த நபரை குறித்து பெரியோரிடமும் (Elders opinion), ஆயரிமும் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
3. ஒரு பெண்னை விட ஆணின் வயது மற்றும் படிப்பு , சம்பளம் சிறிது அதிகமாக இருந்தால் நல்லது. குடும்பத்தில் Ego பிரச்சனைகள் தவிர்த்துவிடலாம்.
4. கல்வித்தகுதி, தோற்றம், திறமை, குடும்பப்பிண்ணனி எல்லாம் அவசியமே. ஆனால் அதை உங்கள் list-ல் முதலாவது வைப்பதை தவிர்க்கலாம். இவை அனைத்தும் இன்று இருக்கும் நாளை மறைய கூடியது. இவை அனைத்தையும் ஒரு நபரிடம் எதிர்பார்க்காதிருங்கள். திருமணம் என்பது "Two sinners joinning into a holy conveant".
5. அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படக் கூடாது என்று வேதம் நமக்கு தெளிவாக கட்டளையிடுகிறது (2 கொரி 16:14). சிலர் விசுவாசியல்லாத ஒரு நபரை மணந்தால் அவரை நித்திய வாழ்விற்கு வழி நடத்தலாம் என்று வித்தியாசமான எண்ணம் கொண்டுள்ளனர்.இவர்களுக்கு நான் சொல்வது... உங்கள் வாழ்நாள் முழுவதும் அந்த ஒரு நபரை நீங்கள் கிறிஸ்துவிடம் வழி நடத்த கூடாமல் போகலாம். எனவே வேதத்திற்குக் கீழ்படிவதே மேல்.அந்த உறவை முறித்து விட்டு, தேவசித்தத்தை தேடுவதே நல்லது.

தேவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமை படைத்தப்பின் அவனின் விலா எலும்பை எடுத்து அதிலிருந்து ஏவாளை படைத்தார்.எனவே தேவன் உன்னை படைக்கும் போதோ, உனக்கு ஏற்ற துணையை ஏற்படுத்தியுள்ளார். உங்கள் விலா எலும்புகள் Match-ஆக வேண்டும்.எனவே நம்மை படைத்த தேவனுக்கே அது எங்கே என்று தெரியும். ஒருவேளை நாமாகவே தேர்வு செய்தால் Bad-யை தெரிந்தெடுப்போம். ஆனால் அதை தேவனிடத்தில் கேட்டால், The best பெற்றுக்கொள்ளலாம்.

- Mrs.Mercy Selwyn



20 உம் வார தேவ வார்த்தை

# ஈசாக்கு

## சுற்றியுள்ளோருக்கு ஆசீர்வாதம்



ஆபிரகாம் மரித்தபின், ''தேவன் அவன் குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தார்'' என்று ஆதி 25:11ல் வாசிக்கிறோம். கர்த்தர் அவனை (ஈசாக்கை) ஆசீர்வதித்ததினால் அந்த வருத்தில் நூறுமடங்கு பலன் கண்டான். அவன் ஐசுவரியவானாகி வர வர விருத்தியடைந்து, மகா பெரியவனான் என ஆதி 26:12,13ல் குறிப்பிடப்பட்ட இவனைக் குறித்து ஓர் அந்நிய தேச அரசனும், ''நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே'' (ஆதி 26:29) என்று சாட்சி கொடுக்கிறான்.

இப்படி ஆசீர்வாதத்தை வாக்குதத்தமாக பெற்ற ஈசாக்கு, சகல வித ஆசீர்வதங்களுடன் வாழ்ந்து வரும் போது, தன்னை சுற்றியுள்ள அனைத்து மக்களுக்கும் ஆசீர்வாதமாக வாழ்ந்து வந்தான். இந்த நாளில் நாமும் ஆசீர்வதிக்கப்படுவதோடு நம்மை சுற்றியுள்ள மக்களுக்கும் ஆசீர்வாதமாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். ஈசாக்கை போல, நாம் வாழும் பிரதேசத்தில், நம் தலைமுறை ஜனங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க ஆண்டவர் விரும்புகிறார். ஈசாக்கு எப்படி, எதினால், தன்னைச் சுற்றி வாழ்ந்த தேவனை அறியாத மக்களுக்கு ஆசீர்வாதமாக வாழ முடிந்தது என்பதை பார்ப்போம்.

<u>1. சத்தம் கேட்டு சித்தம் செய்து வாழ்ந்தவன்:</u>

ஈசாக்கு, அவன் தகப்பனாகிய ஆபிரகாமைப் போல தனிமையில், தேவ சந்நிதியில் நின்று, தேவ சித்தத்தை அறியும் பழக்கமுடையவன். ஈசாக்கு சாயங்கால வேளையிலே, தியானம் பண்ண வெளியே போயிருந்தான் என ஆதி 24:63ல் வாசிக்கிறோம். ஒரு சமயத்தில் தான் வாழ்ந்து வந்த, கேராரில் (கனான் தேசத்தில்) பஞ்சம் ஏற்பட்ட போது, எகிப்து தேசத்திற்கு செல்ல தீர்மானித்தான். ஆனால் ஆண்டவர் அவனுக்கு தரிசனமாகி, இந்த தேசத்திலே வாசம் பண்ணு, நான்... உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொன்னபோது, அவர் சத்தத்திற்கு கீழ்படிந்து, கேராரிலே குடியிருந்தான் (ஆதி 26:6). அவன் பஞ்ச காலத்திலும் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, அந்த தேசத்திலே விதை விதைத்து, நூறு மடங்கு பலன்களை கண்டதோடு, அந்த தேசத்துக் குடிகளுக்கும் ஆசீர்வாதமாக மாறினான்.

''விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்'' என கலா 3:9ல் குறிப்பிடப்பட்ட வாக்கின்படி, நாமும் ஆபிரகாமுக்குள் ஆசீர்வாதத்தின் சுதந்தரவாளிகளே. நாமும் ஆண்டவரின் சத்தத்திற்கு செவி கொடுக்கிறவர்களாக, அவர் சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்றும் போது, நம் வாழ்வில் நாம் ஆசீர்வதிக்கப்படுவதோடு நம்மை சுற்றி வாழும் மக்களுக்கும் ஆசீர்வாதமாய் மாறுவோம்.

<u>2. சகமனிதர்களுடன் சாட்சியாய் வாழ்ந்தவன்:</u>

ஈசாக்கு வாழ்ந்த தேசத்திலுள்ள பெலிஸ்தரான சகமனிதர்கள் அவன் மேல் பொறாமைக் கொண்டு தன் தகப்பனாகிய ஆபிரகாம் காலத்தில் வெட்டப்பட்ட துரவுகள் எல்லாவற்றையும் தூர்த்து, மண்ணினால் நிரப்பி போட்டார்கள் (ஆதி 26:15,16). ஆனாலும் ஈசாக்கு அவைகளை திரும்பவும் தோண்டினான். தண்ணீர் வர கண்ட கோராஊரின் சக மேய்ப்பர்கள் அந்த துரவை சொந்தம் கொண்டாடி, வாக்குவாதம் செய்தபோது, அதை அவர்களுக்கே விட்டுவிட்டு, வேறே ஊருக்கு சென்று, மீண்டும் அங்கே ஓர் துரவு தோண்டினான். அவ்வூரார் அதை குறித்து உரிமைக் கொண்டாட, அதையும் அவ்வூர் மக்களுக்கே விட்டு கொடுத்துவிட்டு மூன்றாவதாக ஓர் இடத்திற்கு சென்று அங்கேயும் ஓர் துரவை தோண்டி அந்த இடத்திற்கு ''ரெகோபோத்'' என பெயரிட்டான். ஆண்டவர் ஈசாக்கிற்கு அந்த இடத்திலே தரிசனமாகி, ''நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்'' (ஆதி 26:24) என வாக்கு கொடுத்தார்.

ஈசாக்கு தன்னுடன் வாக்குவாதம் செய்த சகமனிதர்களுடன் சண்டையிடாமல், சாட்சியாய் வாழ்ந்து, தேவன் தனக்கு தந்த ஆசீர்வாதங்களை, அவர்களுக்கு விட்டு கொடுத்து வாழ்ந்தது போல, நாமும் நாம் வாழும் பகுதியில் சாட்சியாய் வாழ ஆண்டவர் நம்மிடையே எதிர்பார்க்கிறார். உன்னோடே வழக்காடி, உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்கிறவனுக்கு, உன் அங்கியையும் விட்டுவிடு (மத் 5:40) என்ற இயேசுவின் போதனைக்கேற்ப வாழும் போது, நாம் நம்மை சுற்றியுள்ள மக்களுக்கு ஆசீர்வாதமாய் வாழ முடியும்.

<u>3. சத்துருக்களிடமும் சமாதானமாய் வாழ்ந்தவன்:</u>

தனது தேசத்தாருக்கே ஆசீர்வாதமாக வாழ்ந்து வந்த ஈசாக்கை, அந்த தேசத்தின் இராஜாவான அபிமலேக்கு, ''நீ எங்களை விட்டு போய்விடு'' (ஆதி 26:16) எனப் பகை உணர்வால் தன் தேசத்தை விட்டே துரத்திவிட்டான். அதே இராஜா, ஈசாக்கு வாழும் இடத்திற்கே தேடி, சென்று நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்று கண்டோம் (ஆதி 26:28), உம்மோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம் (ஆதி 26:29) என்கிறான். தன்னை தேடி வலிய வந்தவர்களை ஈசாக்கு வஞ்சம் தீர்த்திட தீர்மானிக்காமல் சத்துருவான அவர்களுக்கு விருந்து கொடுத்து, அவர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்கிறான். அந்த நாள் தானே ஆண்டவர் ஈசாக்கிற்கு புதியதோர் நீரூற்றை காட்டி அவனை ஆசீர்வதிக்கிறார். அந்த இடத்திற்கு ''பெயர்சபா'' (ஆணையின் கிணறு) என பெயர் வைத்தான்.

உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் என்று பணித்த இயேசுவின் கட்டளையை கைக்கொண்டு, நம் சத்துருக்களையும் சிநேகித்து, அவர்களுடன் சமாதானமாக வாழும் போது, நாம் ஆசீர்வாதமாக வாழ்வதோடு நம்மை சுற்றியுள்ள மக்களுக்கும் ஆசீர்வாதமாக வாழ முடியும்.

'தேவ சத்தம் கேட்டு சித்தம் செய்து' நம்மிடையே வாழும் 'சக மனிதர்களிடம் சாட்சியாய் வாழ்ந்து', நம்மை பகைக்கிற 'சத்துருக்களுடனும், சமாதானமாய் வாழ்வதின்' மூலம் நாம் ஆசீர்வதிக்கப்பட்டு நம்மை சுற்றி வாழ்வோருக்கும் ஆசீர்வாதமாய் வாழ்ந்திட தேவன் தாமே கிருபை செய்வாராக!

Rev.John David Raj




# இமைப்பொழுது விண்ணப்பம்

1.வடமாநிலங்களில் சிறுவர் விடுதி மற்றும் பள்ளிகள் மூலம் செய்யப்படும் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.சிறுவர், சிறுமியர் தேவ அன்பை உணரவும், அவர்கள் மூலமாக குடும்பங்கள், கிராமங்கள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

2. தேசத்தில் பெண்களின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கற்பழிப்பு, இழிவுப்படுத்துதல், கொலைகள் போன்ற காரியங்கள் நிறுத்தப்படவும், பெண்களுக்கு எதிராக வன்கொடுமைகள் செய்வோர் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

3.ஊழியப்பாதையில் கடினமான பாடுகளை சந்திக்கும் மிஷனெரிகளுக்கு தேவன் மனதளவில் ஊக்கத்தையும், ஆரோக்கியத்தையும், தேவ ஞானத்தையும் மற்றும் பாதுகாப்பையும் கொடுக்க ஜெபிப்போம்.

4.பிப் 4 -உலக புற்றுநோய் தினம். இந்தியாவில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.குறிப்பாக பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.இவர்களை தேவன் சுகப்படுத்த, பெலப்படுத்த ஜெபிப்போம்.

5.புதிதாக சுவிஷேசம் அறிவிக்கப்படும் கிராமங்களிலும், நகரங்களிலும் தேவன் தம்முடைய சர்வ வல்லமையினாலும், கிருபையினாலும் அற்புதங்களை நிகழ்த்தவும், தேவ வசனம் மக்களின் இருதயத்தில் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.

6.ஈரான் நாட்டில் விமான விபத்தில் 176 பயணிகள் கொல்லப்பட்டனர். இவர்களுடைய குடும்பங்களில் தேவ சமாதானம் நிலவ, குடும்ப தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

7.குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக தேசத்தில் நடைபெறும் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன. மத்திய, மாநில அரசுகள் இணைந்து ஆலோசித்து, இந்த சட்டத்தை திருத்தி அமைக்க ஜெபிப்போம்.

8.ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு சில மாதங்களில் 100க்கு மேற்பட்ட குழந்தைகள் சுகவீனமாகி மரித்துள்ளனர்.குழந்தைகளை இழந்துள்ள குடும்பங்களுக்கு தேவன் ஆறுதலையும் சமாதானத்தையும் கொடுக்கவும், இப்படிப்பட்ட சம்பவங்கள் மீண்டும் ஏற் படாதவாறும் ஜெபிப்போம்.

9.தேசத்தில் சுதந்திரமாக செயல்பட வேண்டிய அரசாங்க அமைப்புகளில் அரசியல் தலையீடு, ஊழல் இல்லாதிருக்கவும், அதன் தலைவர்கள் நேர்மையுடன் உண்மையாக செயல்படவும் ஜெபிப்போம்.

10.தேசத்தின் நீதிதுறைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நீதி அமைப்பான உச்ச நீதிமன்றம், 24 உயர் நீதிமன்றங்கள், சுமார் 600 மாவட்ட சிறப்பு நீதிமன்றங்களில் பணி செய்யும் நீதிபதிகள் நியாயத்தோடு தீர்ப்பு செய்ய ஜெபிப்போம்.

11.குடும்பங்களில் கணவன்-மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் அன்போடும், ஒற்றுமையோடும் வாழவும், தேவன் குடும்ப உறவை ஏற்படுத்திய நோக்கத்தை அறிந்து செயல்படவும் ஜெபிப்போம்.

12.படித்து முடித்து பல கனவுகளோடு வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கு தேவன் ஏற்ற வேலையை கொடுக்க மன்றாடுவோம்.

13.பிப் 13 - தேசிய மகளிர் தினம்: பெண்கள் குடும்பத்தை கட்டி எழுப்புவதில் முக்கிய பங்கு வகிப்பதோடும், அறிவியல் மற்றும் தேச பொருளாதார வளர்ச்சியில் பங்கு வகிக்கின்றனர். இவர்களின் வளர்ச்சிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

14.பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைக்கும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகள் நடுநிலையோடு அரசியல் மதசார்பின்றி மனித வளர்ச்சிக்காக செயல்பட ஜெபிப்போம்.

15.குப்பைகளை முறையின்றி கொட்டுவதாலும்,மக்கிபோகாத பிளாஸ்டிக்பொருட்களைபயன்படுத்துவதாலும்மண்வளம் பாதிக்கப்படுகிறது.மக்கள், தனியார் துறைகள், அரசாங்கம் மண்வளத்தை சேதப்படுத்தாது பாதுகாக்க ஜெபிப்போம்.

16. இந்தியாவில் சுமார் 3 கோடி சிறுவர்கள் ஆதரவற்ற குழந்தைகளாக வாழ்கின்றனர். இதில் அநேகர் தெருக்களில் குப்பை பொறுக்கி, பிச்சை எடுத்து பிழைக்கின்றனர். இவர்களுக்கு தகுந்த பாதுகாப்பும், அரவணைப்பும் கிடைக்க ஜெபிப்போம்.

17.அறியாமையின் நிமித்தம் நடைபெறும் குழந்தை திருமணம், பெண் குழந்தையை வெறுத்தல், ஆணவ கொலைகள் போன்ற சமூக தீமைகள் தேசத்திலிருந்து மறைந்து போக ஜெபிப்போம்.

18.இந்தியாவில் ஆன்மீக குருக்களை பின்பற்றுவோர் அதிகமாக காணப்படுகின்றனர்.குருக்களின் தவறான போதனைகள், செயல்களை உணராது அடிமையாக வாழ்வோர் மீட்கப்பட, இயேசுவை கண்டு கொள்ள ஜெபிப்போம்.

19.உலகில் அதிகமாக பத்திரிக்கைகள் விற்கப்படும் நாடுகளில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது. பத்திரிக்கைகள் உண்மையும், நேர்மையுமாய் காணப்படவும், ஒதுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குரல் கொடுப்பவையாக இருக்கவும் ஜெபிப்போம்.

20.இந்தியாவில் 76% பெண்களும், 61% ஆண்களும் விபச்சாரம் ஒரு பாவம் இல்லை என்ற கருதுவதாக ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. இது பாவம் என மக்கள் உணரவும், தேவன் விரும்பாத காரியத்தை விட்டு விடவும் ஜெபிப்போம்.

21.குதிரை பந்தயம், கார்பந்தயம், லாட்டரி சீட்டு, சீட்டாட்டம் மற்றும் பலவகை சூதாட்டங்களுக்கு அடிமைப்பட்டிருப்போர் விடுதலை பெற ஜெபிப்போம்.

22.போதைப் பொருட்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு விற்கப்படுகின்றன. இப்படிபட்ட சமூக விரோத செயலில் ஈடுபடுவோர் மனம்மாற ஜெபிப்போம்.

23.குழந்தை பேறு இல்லாத தம்பதியினருக்கு தேவன் தாமே இரங்கி குழந்தை செல்வங்களை கொடுத்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

24.இந்தியாவில் மதமாற்ற தடைச்சட்டம் உள்ள மாநிலங்களான குஜராத், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கார், ஒடிசா,அருணாச்சல், இமாச்சல், உத்திரக்காண்ட் மற்றும் ஜார்கண்ட்டில் அந்த சட்டம் ரத்து செய்யப்படவும், மதசுதந்திரம் காணப்படவும் ஜெபிப்போம்.

25.குளிரினாலும், வெயிலினாலும் அதிகமாய் பாதிக்கப்படகூடிய இடங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைக்க ஜெபிப்போம்.

26.இடம் வாங்கப்பட்டும் ஆலயம் கட்ட தடைகள் காணப்படும் இடங்களில் தேவன் இடைபடவும், பொருளாதார தேவை சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

27.மிஷனெரிப் பணியோடு மக்களின் மருத்துவ தேவையும் சந்திக்கப்பட மிஷனெரி இயக்கங்கள் தொடர்ந்து செயலாற்றவும், தன்னார்வமுள்ள மருத்துவ மிஷனெரிகள் எழும்பவும் ஜெபிப்போம்.

28.பிப் 28 – தேசிய அறிவியல் தினம்: இந்தியாவில் அறிவியல் மற்றும் விஞ்ஞான வளர்ச்சிக்காக ஜெபிப்போம். ஒவ்வொரு விஞ்ஞானிகளும் தேச வளர்ச்சிக்காக ஆராய்ச்சி செய்ய ஞானம் கொடுக்கப்பட ஜெபிப்போம்.

29.இந்தியாவில் ஒரு நாளைக்கு 80 கொலைகளும், 91 பலாத்கார வழக்குகளும் பதிவாகுவதாக புள்ளி விவரம் கூறுகிறது. இது மாற ஜெபிப்போம்.

– Mrs.Vincy Mervin

NATIONAL CONCERN

FMPB YOUTH & TEENS WING




நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்

# தமிழ்நாடு பாண்டிச்சேரி

முதல் வார ஜெபக் குறிப்புகள்

## விரிவாக்கப்பணி பிரிவு ஊழியங்களுக்காக

FMPB – ன் மூன்று மிக முக்கியமான பிரிவுகளில் (Head Office,Field,Mobilization) முன்னேற்றப்பணியும் (விரிவாக்கப்பணி) ஒன்றாகும்.முன்னேற்ற பணி என்பது நமது இயக்கத்தின் தரிசனத்தையும், தேசத்தின் நிலமையையும் மக்களோடு பகிர்ந்து கொண்டு அவர்களுக்குள் தேசத்தைக் குறித்த பாரத்தையும்,மிஷனெரி தரிசனத்தையும் ஏற்படுத்துவது. முன்னணியிலிருந்து பணியாற்றும் ஊழியர்களுக்காகவும், அவர்கள் செய்யும் ஊழியங்களுக்காகவும் குழுக்களாக கூடி ஜெபிக்கத் தூண்டுவது.தேசத்தின் நிலமையை எடுத்துக் கூறி அவர்கள் மத்தியில் பணி செய்ய முழுநேரபணிக்கு அழைப்பு கொடுப்பது.தேவை நிறைந்த பணியை ஜெபத்தாலும், தங்களின் ஈகையாலும் தாங்க முன் வர அறைகூவல் கொடுப்பது.இந்த பணியில் மண்டல, பிராந்திய, முன்னேற்றபணி செயலர்கள், கௌரவ பிராந்திய,முன்னேற்றப்பணி செயலாளர்கள், பணி மாவட்ட தலைவர்கள், ஸ்கேன் தலைவர்கள், வாலிபர் தலைவர்கள், பெண்கள் தலைவர்கள், ஜெபப்பிரிவு மற்றும் ஜெபக்குழு தலைவர்கள் என பல நிலையில் உடன் இணைந்து பணி செய்கின்றனர். அனைவருடைய கடினமான முயற்சிகள் தான் இதுவரை இவ்வூழியத்தில் தேவன் தந்த ஆசீர்வாதங்களுக்கு காரணமாக உள்ளது. இப்படிப்பட்டதலைவர்களின் குடும்பங்களுக்காகவும், அவர்களின் தியாகங்களுக்காகவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

### கீழ்கண்ட முன்னேற்ற பணி முழுநேரஊழியர்களுக்காக ஜெபிப்போம்:

**தமிழ்நாடு & பாண்டிச்சேரி விரிவாக்கப்பணி பிரிவு செயலர்:**

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங்
திருமதி. வசந்தி இம்மானுவேல்
திருமதி. ஷைனி ஜோசப்
திரு. சுந்தரம்

**மண்டல செயலர்கள்:**

திரு. சுந்தர்சிங், திருமதி. விஜிலா
திரு. ரூபன் சாமுவேல், திருமதி. மரகதமணி
திரு. TYP .ஆசீர்
திரு. அகஸ்டஸ், திருமதி. லிடியா
மற்றும் 1 கௌரவ மண்டல செயலர்

**பிராந்திய செயலர்கள்:**

திரு. ஜெயசேகர், திருமதி. ஜெமி
திரு. C.R. ஜார்ஜ், திருமதி. வசந்தி
திரு. ரவிக்குமார், திருமதி. கிறிஸ்டா
திரு. டேனியேல் தாமஸ், திருமதி.பிரேமலதா
திரு. பால்ராஜ், திருமதி. ஹெப்சி
திரு. டேவிட், திருமதி. எலிசபெத்
திரு. ஜேக்கப்பிரதீப், திருமதி. சிந்தியா
திரு. ஆண்ட்ரு ஜவஹர், திருமதி. ஹெப்சிபா
திரு. மணிமாறன், திருமதி. செல்வி
திரு. வின்செண்ட், திருமதி. லில்லி
மற்றும் 23 கௌரவ பிராந்திய செயலர்கள்

**மலையாளம்**

திருமதி. ரெபேக்கம்மா பால்
திரு. தாமஸ், திருமதி. சாரம்மா

**முன்னேற்ற பணி செயலாளர்கள்:**

திரு. எட்வர்ட், திருமதி. ஜிக்கி
திரு. ஐசக் தனசிங், திருமதி. லதா
திரு லக்ஷ்மணன், திருமதி. பிரின்ஸஸ்
திரு. ஜான் பெனின், திருமதி. ஷீபா
திரு. ஆனந்தராஜ், திருமதி. சாந்தி
திரு. எசேக்கியா, திருமதி. எஸ்தர்
திரு. ராஜாசிங், திருமதி. டாரதி
திரு. அசரியா ராஜ்குமார்,
திருமதி. ஜெபராணி
திருமதி. பாக்கியம் கொர்நேலியு
திருமதி. அனியா ஜோஸ்பின்
திரு. K.V. சந்திரன் திருமதி. ஜலின்
திரு. R.R தர்மராஜ்,
திருமதி. மரியசெல்வி
திரு. ஜான் சாமுவேல்,
திருமதி. மிக்கேலம்மாள்
திரு. மெயின்ராஜ், திருமதி புனிதா
மற்றும் 223 கௌரவ முன்னேற்ற பணி செயலாளர்கள்

### 2020 ஆண்டின் முன்னேற்ற பணி ஊழிய திட்டங்களுக்காக ஜெபியுங்கள்:

1. தமிழகமெங்கும் 'செயல்படு 2020' வீடுகள் தோறும் (ACTS 2020 H2H) இத்திட்டத்தின் மூலம் கீழ்கண்ட செயல்முறைகளை நிறைவேற்றிட ...
   - 1 லட்சம் இல்லங்களை சந்தித்தல்
   - 1000 ஜெபக்குழுக்கள்
   - 1000 மிஷனெரி தாங்குவோர்
   - தமிழகமெங்கும் 1000 மணி ஜெபநேரங்கள். கொடுத்தல் (36,500)
   - 10,000 புதிய அங்கத்தினர்கள்.
   - 100 முழுநேர மிஷனெரிகள்
   - 2000 குழந்தை தாங்குவோர்
   - தாய் மொழியில் வேதாகமம்
   - மிஷனெரி குழந்தைகளை தாங்கும் திட்டம்
2. ஒவ்வொரு முன்னேற்றப்பணி எல்கையிலும் இல்லங்கள் தோறும் தேசத்திற்காக ஜெபிக்கும் ஜெபக்குழுக்களை விரிவுப்படுத்த
3. குடும்ப கூடுகை, அறைகூவல் கூடுகை, பெண்கள், வாலிபர் கூடுகை, இளம் வாலிபர் கூடுகை, ஸ்கேன் கூடுகை ஆகிய கூடுகைளுக்காக
4. ஜெபித்து தாங்கும் மாநிலத்திற்கு சென்று 3 நாட்கள் உபவாசித்து ஜெபிக்க 10 குழுக்களை கண்டுபிடிக்க ஜெபிப்போம்.
5. அனைத்து முன்னேற்ற பணி மாவட்டங்களிலும் இரண்டாம் கட்டத் தலைவர்களை கண்டுபிடிக்க ஜெபிப்போம்.
6. ஒவ்வொரு முன்னேற்றப்பணி மாவட்டத்திலும் குறைந்தது 10 இளம் தம்பதியர்களை கண்டுபிடித்து அவர்களுக்கென பிரத்தியேக கூடுகை நடத்தி மிஷனெரி பணியில் இணைத்தல்..
7. பிராந்திய வாரியாக பயிற்சி கூடுகைகள் நடத்துதல்...
8. தேவன் அழைத்த அழைப்பில், அர்ப்பணிப்பில், தரிசனத்துடனும் தீவிரத்துடனும் பணிகளை நிவேற்றிட ஜெபிப்போம்.
9. முன்னேற்ற பணியில் சுகவீனமாக உள்ள ஊழியர்களான திருமதி. சாந்தி ஆனந்தராஜ் – சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை (முடிவடைந்தது), திரு. R.R. தர்மராஜ் – இருதய வால்வு அறுவை சிகிச்சை (முடிவடைந்தது). தங்கள் சுகவீனங்களின் மத்தி யிலும் இப்பணியில் முனைப்போடு செயல்பட்டு வருகின்றனர். அனைவரின் சரீர சுகத்திற்காக...
10. முன்னேற்ற பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் குழந்தைகளுக்கு தேவன் நல்ல விடுதலையை கொடுக்க...
    திரு.TYP ஆசீர் மகன் – தாம்சன்
    திரு.C.R. ஜார்ஜ் மகள் – அப்பியா
    திரு. ஜெயசேகர் மகள் – ஜெஸி மிராக்ளின்
    திரு.அன்பையா மகள் – அக்னஸ்
    திரு.கிறிஸ்டோபர் மகள் – கவிதா
    திரு.ஜான் பெனின் மகள் – கரோலின்
11. அனைத்து முன்னேற்ற பணி ஊழியர்களும் தேவனோடும், குடும்பத்தோடும்,சகஊழியர்களோடு உள்ள உறவில் பெலப்பட ஜெபிப்போம்.
12. மனசோர்விலிருந்து விடுபட்டு நல்ல சரீர சுகத்தோடு தேவபணியை செய்ய, குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்பட... ஜெபிப்போம்.



FMPB கேரீத் 13 பிப்ரவரி 2020

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங்



இந்திய தேசத்தில்

# கொடூரம்

## கொடிய பாவம் 2

நீங்க ஜெபிப்போம்.

# BARBARISAM

கொடூரம்,கொடுமை என்ற வார்த்தைகளை கேட்ட உடனே நம் மனதில் வருவது ஹிட்லர் தான். ஹிட்லரின் யூத இன ஒழிப்பு திட்டம் பற்றி விவரிப்பதானால் வருடக்கணக்காக அவற்றினை விவரித்துக்கொண்டே இருக்கலாம் என்று கூறுகின்றனர். நியாயமே படுத்த முடியாத இனப்படுகொலை அது. ஒட்டு மொத்த மானுடகுலத்தின் கொடூரசுபாவம் விசுவரூபம் எடுத்த ஒரு சந்தர்பம் அது. 11 மில்லியன் மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.ஒரு துளி உணவிற்காகவும் இன்ன பிறவிஷயங்களுக்காகவும், யூதர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் அடித்து கொண்டார்கள்.மற்றவர்களின் பொருட்களை திருடத்தயாராக இருந்தார்கள்.மிக அடிப்படையான வியங்களை பறித்துக் கொண்டால் மனிதர்கள் எவ்வாறு விலங்குகளுக்கு நிகரானவர்களாக மாறுவார்கள் என்ற கொடுமையை நாஜிப்படை திட்டமிட்டு செய்தது.உலகில் பல்வேறு காலக்கட்டங்களில் பலவித மாக மனித இனத்தில் எளியவர்கள், சிறுமையானவர்கள், வலிமையானவர்களால் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். கொலை, தலை துண்டித்தல், தோலுரித்தல், நகம் பிடுங்குதல், கற்பழிப்புகள் என கொடுமைகள் விவரிக்க முடியாதவைகளாக நீண்டு கொண்டே செல்கிறது.அதுவும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான கடுமையான கொலைவெறி தாக்குதல்களை கையாளும் முதல் 10 நாடுகளில் முதலிடத்தில் சோமாலியா உள்ளது.முக்கியமாக சிரியா தேசம் சென்ற வருடங்களில் 3ம் இடத்திற்கு வேக மாய் முன்னேறி விட்டது. இங்கு வாழ்ந்த பல இலட்சம் கிறிஸ்தவ குடும்பங்கள் உயிரோடு இல்லை. காரணம் இங்கு வேகமாய் இயங்கிவரும் தீவிரவாத இயக்கங்கள் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வெட்டி சென்றது. இன்றும் பல லட்சங்கள் வீடு இழந்து சிதறடிக்கப்பட்டுள்ளன. நைஜீரியாவில் கடந்த ஆண்டு நடந்த கொலைகள் சென்ற ஆண்டு மொத்த உலகத்திலும் நடந்த கொலைகளுக்கு சமமாக கருதப்படுகிறது. அவ்வளவு கொடுமைகளை நைஜீரிய நாடு தாங்கி வருகிறது. ஆனால் அந்த ஆப்பிரிக்க தேசங்களில் ஒரு வருடத்திற்கு 6 லட்சம் பேர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வருகின்றனர்.

எகிப்து, மியான்மர், கொலம்பியா, ஜோன்டான், எமன், இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் முதல் 10 இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றன. மனிதர்கள் தங்கள் சக மனிதர்களை இனம், நிறம், பாலினம், மதம் ஜாதி, என வேறுபடுத்தி பார்த்து அழிக்கும் நிலை மாற வேண்டும். பாலியல் ரீதியாக நடத்தப்படும் கொலை வெறியாட்டங்களும் தடைசெய்யப்பட வேண்டும். பெண்களுக்கும், ஆண்களுக்கும், சிறுவர்களுக்கும், வேறுபாடும், பட்சபாதமும் இன்றி நிகழ்த்தப்படும் கொடூரங்கள் உலகத்தை விட்டு ஒழிய வேண்டும். 50,000க்கும் அதிகமான நக்சல் தீவிரவாதிகள் இருப்பதாகவும், அவர்கள் இந்தியாவிலுள்ள வனப்பகுதிகளில் 5ல் ஒரு பங்கை ஆக்கிரமித்துள்ளனர் எனவும் தெரிய வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் நக்சல்வாதிகளின் பயங்கரவாதத் தாக்குதலால் 10,000க்கும் அதிகமான பேர் கொல்லப்பட்டுள்ளனர். சகமனிதர்களிடம் அன்பை பகிர்ந்து வாழ வரும் தலைமுறைக்கு மாதிரியாய் வாழ்வோம்.

## ஜெபக்குறிப்புகள்:

1. உலகம் முழுவதும் அதிகரித்து வரும் போர் பதட்டங்கள் தணிய ஜெபிப்போம்.
2. மதம், நிறம், ஜாதி அடிப்படையில் மனிதர்களை கொடுமைப்படுத்தும் அரசியல்வாதிகளை மக்கள் புறக்கணிக்க ஜெபிப்போம்.
3. பாலுணர்வு தூண்டுதல், வெறித்தனமான துன்புறுதல்களை செய்யும் மனித பேய்களிடம் இருந்து பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.
4. பெண்களுக்கெதிரான குற்றங்கள் ஆசீட் வீச்சு, கற்பழிப்பு சம்பவங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.
5. உடல் உறுப்புகளுக்காகவும், பணத்திற்காகவும் கடத்தப்படும் சிறுவர்கள் பெண்களுக்காக ஜெபிப்போம்.
6. இப்படிபட்ட அநீதி செயல்களுக்கு துணைபோகும் அரசு வழக்கறிஞர்கள் காவல்துறையினரை தேவன் தாமே கண்டிக்க
7. நக்சல்வாதிகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் தேவனின் ஆளுகையும் சமாதானமும் காணப்பட
8. தீவிரவாதம் மட்டுமே அனைத்து பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான ஒரே வழி என்று வலியுறுத்திக் கூறி பயங்கரவாதச் செய களில் ஈடுபட வைக்கின்ற அந்தகார ஆவியின் வல்லமை யை இயேசுவின் நாமத்தில் கடிந்து ஜெபிப்போம். அனைத்து நக்சல்வாதிகளும், மாவோயிஸ்ட்களும் தங்கள் பாவத்தி ற்காக மனஸ்தாபப்பட்டு தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு மனந்திரும்பி, இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
9. நக்சலைட்டுகளின் செயல்பாடுகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அரசாங்கம் சரியான தீர்மானத்தை எடுக்க ஜெபிப்போம்.
10. அப்பாவி மக்களின் பாதுகாப்பிற்காகவும், குறிப்பாக கிறிஸ்தவர்கள், ஊழியக்காரர்கள் மற்றும் மிஷனெரிகளின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.



- Mrs.Angel



## மாதம் ஒரு மக்கள்

# நோய்ரா

இன மலைவாழ்மக்கள்

## மாதம் ஒரு மொழி

# டுங்ராபீல்

நோய்ரா இன மலைவாழ்மக்களுக்கு துங்ராபீல் என்ற மறுபெயரும் உண்டு. இவர்கள் மராட்டியம் , மத்தியப் பிரதேச மாநிலங்களில் குஜராத் மாநில எல்லைப் பகுதிகளிலும் வாழ்கின்ற இவர்கள் பூர்வீக குடியினர் ஆவர்.இவர்களின் வாழ்விட விவரமா வது.இவர்கள் நண்டூர்பார், துலே, பட்வானி போன்ற மாவ ட்டங்களிலும், தடாகாவோன், அக்கல்குவா, சகாடா, சிர்பூர், ஜலகாவோன், சோப்பா, பன்சேமல் போன்ற தாசில்களிலும் வசிக்கின்றனர்.

நோய்ரா மொழி மூக்கால் பேசுவது போனறிருக்கும். இவ்வின மக்கள் தனித்தனியாகவும், சேர்ந்து வாழ்கின்றனர். மூங்கில், கம்புகள், மண் கொண்டு கட்டபட்ட ஒரே அறை யுள்ள வீடுகளில் வாழ்கின்றனர். ஓரிடத்தில் தங்கி வாழும் விவசாயிகளாக இருக்கின்றனர். சோளம், கம்பு, பருப்பு வகை கள், வெங்காயம், பட்டாணி, கோதுமை,கரும்பு, பருத்தி போன்றவைகளை பயிர்செய்கின்றனர். மீன், மாமிசம் உண் கின்றனர். இருபாலரிடமும்புகை பிடிக்கும் பழக்கம் உண்டு. நோய்ரா மக்கள் கிழக்குப் பகுதியிலுள்ள பவுரா இனத்தோடும், மேற்கு பகுதியிலுள்ள வசாவா இனத்தோடும் தங்களை அடையாளம் செய்துகொள்கின்றனர்.நோய்ரி மெ ாழி பேசும் இம்மக்கள் வெளியுலகத் தொடர்புக்கு மாநில மொழியைப் பயன்படுத்துகின்றனர். கிராமப் புறங்களில் அரசுத் துறையைச் சேர்ந்த தொடக்கப்பள்ளிகள் அதி கம்செயல்பட்டாலும்குறைந்த கல்வியறிவு வகிதமே காணப்படுகின்றது. பள்ளியில் சேர்க்கைப் பெற்ற பிள்ளைகள் பலர் இடையில் நின்று விடுகின்றனர்.

நமது இயக்கப்பணித்தளங்கள் போரடி,பனசமேல், பிளாஸ்னா, மண்டான, பொக்ரடா, மெனிமதா, சோப்டா ஆகிய இடங்களில் செயல்பட்டு சுவிசேஷ நற்பணி நடக்கி ன்றது. இங்குள்ள பல மிஷனெரிகளும், உள்ளூர் சுவிசேஷ பணியாளர்களுக்காகவும் இதுவரை 25 ஆராதனைக் குழுக்களையும் சுமார் 1000 திருமுழுக்குப் பெற்ற விசுவாசிகளையும் ஆதாயப்படுததியுள்ளனர். நோய்ரா இன மக்கள் காணப்படும் நமது பணித்தளங்களான போரடி, பான் சோமால் வினா ஸ்னர், மண்டானா, பொக்ரடா, மேனிமாதா, சோப்டா ஆகிய பகுதிகளில் இவர்கள் சுவிசேத்திற்கு காட்டும் வாஞ்சைக்காக தேவனை துதிப்போம்.

ஜெபிப்போம்.

1. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நொய்ரா இனமக்கள் கிறிஸ்துவின் அன்பை கண்டுக்கொள்ள ஜெபிப்போம்.
2. நோய்ரி மொழியில் வேதாகமம் உருவாக்கப்பட...
3. நொய்ரா இன மக்கள் மத்தியில் எழுத்தறிவு மிகவும் குறைவாக காணப்படுகிறது.இந்நிலை மாற, இவ்வின மக்கள் அனைவரும் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட ஜெபிப்போம்.
4. இம்மக்கள் மத்தியில் இவர்களது உயர்வுக்காக உழைக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும், ஊழிய ஸ்தாபனங்களுக்கும் விடுதலையோடு தங்கள் பணியை நிறைவேற்ற ஜெபிப்போம்.
5. சுவிசேஷத்திற்கு தடையாக காணப்படும் மதமாற்ற தடைச்சட்டம் மதவாத இயக்கங்களின் எதிர்ப்புகள், அரசியல்வாதிகளின் எதிர்ப்புகள் முற்றிலும் மறைந்து போக..
6. இப்பிரதேசத்தில் நன்கு மழை பெய்திட ஜெபிப்போம்.

மொழி : டுங்ராபீல்
இம்மொழி பேசும் மொத்த மக்கள் தொகை – 3 இலட்சம்
இம்மொழி பேசப்படும் மாநிலங்கள்:
குஜராத், மத்தியப்பிரதேசம், மஹாராஷ்டிரா
மொழிக் குடும்பம்: இந்தோ ஆரிய மொழிக் குடும்பம்

இம்மொழியில் வேதாகமம்: நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியர்கள் திரு.சுனில் குமார் மேத்யூ & மாயா தம்பதியினர் இம் மொழியில் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்து 2009ல் வெளியிட்டனர். தற்சமயம் பழைய ஏற்பாடு மொழி பெயர்ப்பு பணி நடைபெற்று வருகிறது. கூடவே இம் மொழியை பேசும் மக்கள் வாழும் கிராமங்களில் முதியோர் கல்வி திட்டம் மூலம் கல்வி அறிவு கொடுக்கப்பட்டு வருகிறது.

மொழி அறிமுகம்: ‘டுங்ராபீல்’ மொழிக்கு தேவநாக்ரி எழுத்து வடிவம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் குஜராத் மாநிலத்திலுள்ள டுங்ராபீல் இன மக்கள் குஜராத்தி எழுத்து வடிவத்தை தங்கள் மொழிக்கு பயன்படுத்துகின்றனர்.

மொழி பேசும் மக்கள்: இந்தியாவில் 2வது அதிக ஜனத்தொகை கொண்ட ஆதிவாசி இன மக்கள் பீல் இனத்தவராவர். குஜராத் மற்றும் மத்தியப்பிரதேசத்தி லுள்ள டுங்ராபீல் இன மக்கள் பீல் இனத்தின் உட்பிரிவாக அறியப்படுகின்றனர். இவர்கள் முன்னோர்களின் ஆவி களை வணங்குவதோடு, மரித்தவர்களுடைய ஆவிகள் மிருகங்களின் உருவில் உலாவுவதாக நம்பி, தங்களுக்கு அவர்கள் தீங்கு செய்துவிட கூடாது என்பதற்காக அவர்களை கனப்படுத்தி வழிபாடுகளை செய்கிறார்கள். இதினிமித்தம் மரித்தவர்களுடைய சடலங்களை அடக்கம் செய்யும் போது சடங்குகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இம்மொழி பேசும் மக்கள் மத்தியில் சுவிசேஷப்பணி:

1988ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூலமாய் இவர்கள் மத்தியில் ஊழியங்கள் துவங்கப்பட்டது. பிரசங்கிக்கப்பட்ட வசனங்களை தேவன் அடையாளங்கள் அற்புதங்கள் மூலமாக உறுதிப்படுத்தவே, அநேகர் சுவிசேஷத்திற்கு செவிசாய்த்தனர். கிராமங்கள் தோறும் திருச்சபைகள் துவங்கப்பட்டது. சுமார் 13,000க்கும் அதி கமான மக்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று, எழிச்சியோடு அவரை தங்கள் கிராமங்களில் ஆராதித்து வருகின்றனர்.

துதிக்க: 229 கிராமங்களில் தேவனை ஆராதிக்கும் 13,608 விசுவாசிகளுக்காகவும், அவர்கள் மத்தியில் கட்டப்பட்டுள்ள 29 ஆலயங்களுக்காகவும், தேவன் இவர்கள் மத்தியில் எழுப்பி தந்த 33 சுதேச ஊழியர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: டுங்ராபீல் இன மக்கள் மத்தியில் ஊழியங்கள் பெருகவும், மக்கள் அனைவரும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று ஆராதிக்கவும் தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

- Sis. Sheela Mary



# பள்ளிப் பருவம்

4ம் வார ஜெபக்குறிப்புகள்

அழுகையுடன் பிடிக்காமல் பள்ளி வாசல் மிதித்தோம். வீட்டை தாண்டிய நேசம்தனை நண்பர்களால் அறிந்தோம். கவலையின் சுவடரிய காலமாய் எல்லார்க்கும் கண்முன் வருவது இந்த பள்ளிப்பருவம். கடந்து வந்த ஒவ்வொரு நாளும் இனிமை யான நாட்கள் என்று இப்போது உள்ளத்துக்குள் உணர்கிறோம். நட்பு ஒழுக்கம், கல்வி என பல தந்தது. பள்ளி நல்லதொரு எதிர்காலம் தந்தது. பள்ளி பசுமையான நினைவுகளை அள்ளி தந்தது, பள்ளிபருவம் மீண்டும், மீண்டும் நினைக்க தோன்றும் நினைத்தால் நெஞ்சினில் இனிக்கும், மறந்தாலும் மனதைவிட்டு அகலாது. அதுவே நம் பள்ளிப்பருவம். மீண்டும் மீண்டும் செல்லமுடியாத ஒரு இடம் தாயின் கருவறை மட்டுமின்றி பள்ளிப்பருவமும் தான்!!

நம் இந்திய தேசத்தில் 1.5 மில்லியன் பள்ளிகள் இருக்கின்றன.4 வயதில் ஆரம்பிக்கும் பள்ளி வாழ்க்கை 17 வயது வரை எல்லாவற்றையும் கற்க வைத்து நம் இலட்சியங்களுக்கு வழிகாட்ட சாதனை படைக்க உதவி செய்கிறது. பள்ளி பருவத்தை குறித்து, இன்னும் ஏராளமான அழகிய கவிகளால் சொல்லிக் கொண்டே போகலாம். பள்ளி பருவத்தில் மாணவ, மாணவிகள் சந்திக்கும் போட்டிகள் ஏராளமானவை.ஒருவனுடைய தாலந்தை கண்டுபிடிக்க பள்ளி வழிவகை செய்கிறது.அதே நேரத்தில் நிறம், ஜாதிப்பிரிவினை, பணக்காரன் ஏழை என்று வகையறுத்து அவர்கள் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர் ஒரு சிலர். தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் 2011 கணக்கெடுப்பின்படி 80.33% ஆகும். தமிழகத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் 2009-2010ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மேல்நிலைப்பள்ளிகள் 5343,உயர்நிலை பள்ளிகள் 4996, நடுநிலை பள்ளிகள் 9996, தொடக்கப்பள்ளிகள் 33,326 உள்ளன. பள்ளிப்பருவத்தைப் பற்றி யோசிக்கும் நாம் கல்விக்காக போராடிய தலைவர்களை சந்தித்து நன்றி செலுத்துதல் அவசியம். பள்ளியில் படிக்கும் போது மதிப்பெண்ணுக்காய் போராடுகின்றனரே தவிர எல்லா சவால்களை மேற்கொள்ள, அநேக காரியங்களை கற்றுக்கொள்ள மனதில்லாமல் இருக்கின்றனர். இந்தக் காலத்தில் படிக்கும் பிள்ளைகளை சுற்றி நிற்கும் எல்லாம் பாவ செயல்கள் அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டு Adjust பண்ணாமல், கற்றுக்கொள்ளமல், அவர்கள் வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த சாதனையாளர்களாய் உருவாக ஜெபிப்போம். இதை வாசிக்கும் அன்பு நண்பர்களே இந்த நேரத்தில் ஒருநிமிடம் நீங்கள் படித்த பள்ளியை நினைவுக்கூர்ந்து அந்த பள்ளிக்காக, அதில் படிக்கும் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்:

- உலகமுழுவதுமுள்ள பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு தேவபாதுகாப்பு கிடைக்க ஜெபிப்போம்.
- மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுக்கும் ஆசிரியர்கள், பணிபுரிவோர்களை தேவன் சந்திக்க ஜெபிப்போம்.
- பள்ளி வயதில் எதிர்பாலருடன் தகாத உறவின் நிமித்தம் தங்கள் வாழ்வை தொலைத்தோருக்காக ஜெபிப்போம்.
- சிறந்த சமுதாயத்தை உருவாக்க அரசாங்க பள்ளிகளில் சிறந்த செயல்திட்டங்களை வரையறுத்து செயல்படுத்த ஜெபிப்போம்.
- பள்ளி பருவத்தில் ஜுனியர்,சீனியர் என்கிற வேறுபாடு மறைய ஜெபிப்போம்.
- பள்ளிகளிலிருந்து மாணவர்கள், மாணவியர்கள் நல்ல காரியங்களை கற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- கொலை சம்பவங்கள் பள்ளி மாணவர்களிடம் பரவி வரும் நிலை முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.
- கிராமங்களில் படிக்கும் பிள்ளைகளின் வாழ்க்கை முன்னேற ஜெபிப்போம்.
- பள்ளிபருவத்தில் எதிர்கொள்ளும் எல்லா போட்டிகளையும் நேர்மையான முறையில் எதிர்கொள்ள, மனஅழுத்தம், மனசோர்விலிருந்து விடுபட ஜெபிப்போம்.
- மிகவும் பின்தங்கியுள்ள பிள்ளைகளின் ஞானத்திற்காக, இதனால் சோர்வுற்று மனந்தளர்ந்து போகும் பிள்ளைகளின் சோர்வு நீங்க ஜெபிப்போம்.
- உயர்கல்வி, தொடக்கக்கல்வியில் பயிலும் பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேற, புத்தகசுமை, படிப்புசுமையினால் தளர்ந்துவிடாமல் இருக்க ஜெபிப்போம்.
- பன்னிரெண்டாம் வகுப்பு பள்ளிப்படிப்பை முடித்து வெளி யேறும் பிள்ளைகள் சாதனையாளர்களாய் மாற, அவர்களின் கனவுகள் நிறைவேற ஜெபிப்போம்.
- 5 மற்றும் 8ம் வகுப்பில் படிப்போர் பொதுத்தேர்வில் வெற்றி பெற...
- 10 மற்றும் 12ம் வகுப்பில் படிப்போர் பொதுதேர்வில் வெற்றி பெற்று வாழ்வில் சாதனை படைக்க...
- பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம் எல்லாவற்றை பற்றி சரியாக புரிந்து கொள்ள...
- கலாச்சாரம் என்ற போர்வையால் Trending fashion-க்கு மாறும் நிலைகள் முற்றிலும் தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.
- சிகரெட் பிடித்து designஆக புகைவிடும் பழக்கத்தில் பள்ளி மாணவர்கள் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து முற்றிலும் விடுதலை பெற ஜெபிப்போம்.

- Ms.Hepzi






# ஒடிசா

தலைநகரம்: புவனேஷ்வர்
மக்கள் தொகை :4,19,71,18
மாவட்டங்கள் : 30
சட்டமன்ற தொகுதிகள் :147
பாராளுமன்ற தொகுதிகள் : 21
கல்வியறிவு : 75%

மக்கள் கூட்டம்: ஒடிசி, 62 வகை ஆதிவாசிகள்
பேசப்படும் மொழிகள் : ஒடிசி, ஹிந்தி, உருது
ஆதிவாசிகள் : 22.19%
பொருளாதாரம்: சணல், நெல், எண்ணெய் வித்துக்கள், இரும்புதாது, நிலக்கரி, பாக்சைட் அலுமினியம், கனிம சுரங்கங்கள் துறைமுகம்
மதவிகிதாச்சாரம் : இந்துக்கள் 93% முஸ்லீம் 2.17 % கிறிஸ்தவர்கள் 2.76% மற்றவர்கள் 0.33 %

மாநிலத்தின் சிறப்பு அம்சங்கள்:

60கி.மீ நீளமும், 20 கி.மீ அகலமும் உள்ள இந்தியாவின் பெரிய ஏரி சில்கா இங்குள்ளது. உலகின் 4 வது பெரிய ஹிராகுட் அணை இங்குள்ளது. இங்குள்ள நந்தங்கனன் தேசிய பூங்காவில் உலகின் அரிதான வெள்ளைபுலி வசிக்கிறது. இந்துக்களின் புனித ஸ்தலங்களான பூரி ஜனனாத் மற்றும் கேனார் சூரிய கோயில் இங்குள்ளது.

பிரச்சனைகள்: மாநிலத்தின் நீர் ஆதாரமாக விளங்கும் மகாநதியின் குறுக்கே அணைகள் கட்டி நீர் வரத்தை சத்தீஸ்கட் மாநிலம் தடுக்கிறது. நகரங்கள் தவிர்த்து கிராமங்களில் சாலை வசதி, சுகாதாரம், கல்வி குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. வேலையின்மை பிரச்சனையால் மக்கள் பிற மாநிலங்களுக்கு வேலை தேடி இடம் புலர்கிறார்கள். நக்சல் தீவிரவாதம் காணப்படுகிறது.

## ஜெபக்குறிப்புகள்:

- இம்மாநிலத்தில் தேவன் தந்து வரும் எழுப்புதலுக்காக அவரை துதித்து கிறிஸ்தவர்கள் ஆண்டவருக்கு சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.
- இம்மாநிலத்தில் போடப்பட்டுள்ள மதமாற்ற தடைச்சட்டம் நீக்கப்பட ஜெபிப்போம். மத சுதந்திரம் அனைவருக்கும் அருளப்பட்டு விடுதலையோடு மக்கள் சத்தியத்தை அறிய வேண்டி ஜெபிப்போம்.
- ஏழ்மை, மூட நம்பிக்கை, அறியாமை ஒழிந்து அனைத்து இனமக்களும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
- இந்துக்களின் முக்கிய புண்ணியஸ்தலங்களான பூரி ஜெகன்நாத் கோவில், லிங்க ராஜர் கோவில், கொனார்ச் சூரிய கோவில் அவற்றிற்கு வரும் மக்கள் அனைவரும் இரட்சிக்க ப்படவும் ஜெபிப்போம்.
- ஒரிசா மாநிலத்தில் உள்ள 31 மாவட்டங்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.
- ஒரிசா தேசத்தில் எழுப்புதல் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.
- இம்மாநிலத்தின் மக்கள் தொகையான 4,19,71,18 அனைவரும் இரட்சிக்கப்பட்டு, பரலோக ராஜ்யத்திற்குள் சேர்க்கப்பட ஜெபிப்போம்.
- இம்மாநிலத்தை ஆளும் முதலமைச்சர் நவீன் பட்நாய்க் அவர்களுக்கு தேவன் இம்மாநிலத்தை ஆளக்கூடிய ஞான த்தை தேவன் தர ஜெபிப்போம்.
- பாவ பழக்கங்களில், கிரிமினல் குற்றங்களில் ஈடுபடுவோர் மனம்மாற ஜெபிப்போம்.
- வசனம் பிரசங்கிக்கப்படுகிற இடங்களிலெல்லாம் அற்புதங்கள் அடையாளங்கள் வெளிப்படவும், ஜனங்கள் பாவ கட்டுகளிலிருந்து விடுதலை பெறவும் ஜெபிப்போம்.
- கிறிஸ்தவர்கள் மீது வரும் அச்சுறுத்தல்கள் ஒழிந்து போக ஜெபிப்போம்.
- ஒரிசாவிலுள்ள சபைகள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் ஒருமனம் உண்டாகவும், சபைகளில், கிறிஸ்தவர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகவும், ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.
- இம்மாநிலத்தை ஆளுகை செய்யும் பிசாசின் அந்தகார கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.
- இம்மாநிலத்தில் உள்ள தீவிரவாத செயல்கள் முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.
- சுவிசேத்திற்கு திறந்த வாசல் உருவாக ஜெபிப்போம்.

- Prayer Wing






# பாடுகள் ஏன்?

அநேகருக்கு எழும் கேள்வி இயேசு கிறிஸ்து இருப்பது உண்மை என்றால் ஏன் உலகத்தில் பாடுகள் , பசி, பட்டினி, நோய், சாவு போன்றவை இருக்கிறது. இதற்கு முதலாவது நாம் தெரிந்துக் கொள்ள வேண்டியவை நாம் வாழும் இப்பூமி ஒரு விழுந்து போன உலகமாகும். இதில் நன்மை செய்பவர்கள் எப்பொழுதும் போற்றப்படுவதும் இல்லை, தீமை செய்யும் எல்லோரும் தண்டிக்கப்படுவதும் இல்லை .நமக்கு நேரிடும் பாடுகளுக்கு காரணம் (1)ஒருவேளை நானாகவே இருக்கலாம். அதாவது எனது பாவம். இதனால் பாதிக்கப்படுவது பிறர் மற்றும் நான். இதற்குத் தீர்வு தேவனிடத்தில் மன தாழ்மையாய் மன்னிப்புக் கேட்பது.(2).பிறருடைய பாவம் இதற்கு காரணமாக இருக்கலாம். இதனால் பாதிக்கப்படுவது பாவம் செய்தவர்கள் மற்றும் பாவம் செய்ய அனுமதித்தவர்கள். இதற்கு தீர்வு பாவம் செய்தவர்களுக்கு அல்ல அவர்களின் பாவத்திற்கு எதிர்த்து நிற்பது மற்றும் அவர்களை ஏற்றுக்கொள்ளுதல் (3) தவிர்க்கக்கூடிய சரீரப்பிரகாரமான அழிவு மற்றும் இயற்கையின் அழிவே இதற்கு காரணம் உண்மையை நிராகரிப்பவர்களுக்கும் மற்றும் எச்சரிப்புகளை அசட்டைச் செய்தவர்களும் அவர்களைச் சுற்றியுள்ளோரும் தீர்வு என்னவென்றால் முடிந்தவரை அவர்களைத் தடுத்து நிறுத்துவது (4) தடுக்க முடியாத சரீரபிரகாரமான அழிவு மற்றும் இயற்கையின் அழிவு. இதற்கு காரணம் தேவன் அல்லது சாத்தான்.

இதனால் பாதிக்கப்படுபவர்கள் தேவன் யாரையெல்லாம் வாதிக்க அனுமதிக்கிறாரோ அல்லது சாத்தான் யாரையெல்லாம் வாதிக்கத் திட்டமிட்டுள்ளானோ அவர்கள் தான். இதற்கு தீர்வு தேவனை மாத்திரம் சார்ந்து அவர் மேல் நம்பிக்கை வைத்திருப்பது. நாம் பாடுகளுக்கு ஆளாகும் போது அது எப்போதும் சாத்தானால் வருகிறதா? வேதத்தில் யோபு என்னும் தேவ மனிதனும் அநேக துன்பத்தைச் சந்திக்க நேரிட்டது. அவை அனைத்தும் சாத்தானால் நேரிட்டது. ஆனால் இது எல்லா நேரங்களிலும் இப்படி சாத்தானால் வருவது அல்ல. மேலே கொடுக்கப்பட்ட குறிப்புகளில் நமக்கு துன்பங்கள் வருவதற்கான 4 காரணங்களை கண்டறிந்தோம். அதில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு காரணங்கள் நம் பாடுகளுக்கு காரணமாக இருக்கலாம். நாம் எதனால் துன்பப்படுகிறோம் என்பதை அறிந்தால் அதற்கான காரணத்தை தவிர்க்க உதவும். அதைவிட முக்கியம் நாம் அத்துன்பத்தை எப்படி மேற்கொள்வது என்பதை அறிவதே.

<u>யோபு பாடுகள் அனுபவித்ததற்கான சில காரணங்கள்:</u>

•சாத்தானை தோற்கடிக்க (யோபு 1:9-11, 2:4,5)
•யோபு எல்லா காரியத்தாலும் தேவன் மீது சார்ந்திருக்கவே (யோபு 42:5)
•யோபு தன்நிலையையே அறிவார் (யோபு 40:4, 42:6)
•யோபு சிநேகிதர்கள் தவறாக பிறரை நியாயந்தீர்க்காமல் இருக்க (யோபு 42:7)
•யோபுக்கு நேராய் வரும் வசைச் சொற்கள்களுக்கு பதிலடி கொடுக்காமல் அவர்களுக்காய் ஜெபிக்க கற்றுக்கொள்ள(யோபு 42:10) தேவன் அவனைக் குறித்து வைத்திருக்கும் எல்லா திட்டங்களும் ஆசீர்வாதமாய் முடியும் என்பதை உணர வைக்கவே (யோபு 42:10)

நாம் துன்பங்களை அனுபவிக்கும் போது, நம்மை சுற்றியுள்ளவர்கள் கூறும் Comments பலவாக இருக்கும். யோபுவின் நண்பர்களும் அப்படித்தான் கூறினார்கள். யோபு தன் பாவத்தின் நிமித்தமே இவ்வாறு துன்பப்படுகிறான். யோபு பாவம் செய்தேன் என்று ஒற்றுக்கொள்ளாததால் துன்பப்படுகிறான் என்று சிலர் கூறினார்கள். யோபுவிற்கு இன்னும் அதிக துன்பம் பொருந்தும் என்று சில நண்பர்கள் கூறினர். சிலர் யோபுவை தேவன் பயிற்சிவிக்கிறார் என்று கூறினார். நீ தேவனிடம் போய் உன்காரியத்தை முறையிடு என்றனர். சிலர் உன்பாவத்தை விட்டுவிடு என்றனர். இப்படியே எவ்வளவு நாட்களை கழிப்பாய் என்றனர். யோபுவிற்கு, தான் எந்த குற்றமும் செய்யாமல் இருக்கும் போது ஏன் இத்துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று கேள்விகள் இருந்தன. அதற்கு நண்பனான எலிகூ, யோபுவை சிறிது தேவனுக்கு நேராய் திருப்ப முயற்சித்தான். நாமும் துன்பத்தின் வழியாய் செல்லும் போது நாம் நம்மையே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் ஆறு ஆகும்.

1. நான் தேவனால் என் பாவத்திற்காய் தண்டிக்கப்படுகிறேனோ? அப்படி இருந்தால் நம் பாவத்தை அறிக்கைச் செய்து விட்டுவிடலாம்.

2. நான் நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முயற்சிக்கையில் சாத்தான் துன்பத்தை கொடுக்கிறானா? அப்படி இருந்தால் தேவ பலனை பெற்றுக் கொண்டு துன்பத்தை மேற்கொள்ளலாம்.

3.துன்பத்தில் இருக்கும் பிறருக்கு உதவ தேவனால் உருவாக்கப்படுகிறேனா? அப்பொழுது சுய பரிதாபத்தை விட்டுவிட்டு பிறருக்கு உதவ தேவன் புதிய வழிகளை திறக்க ஜெபித்து காத்திரு.

4.யோபுவைப்போல சோதிக்கப்பட தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறேனா?இச்சூழ்நிலையில் மற்ற விசுவாசிகளின் ஜெப உதவியை நாடலாம்.அவருடைய சித்தம் உன்னில் நிறைவேற ஒப்புக்கொடு.

5. நான் பொறுப்பு ஏற்க முடியாத ஏதோ ஒரு காரியத்தின் விளைவாக இச்சோதனை வந்துள்ளதா? விழுந்துப் போன இந்த உலகத்தில் நல்லவர்கள் மற்றும் கெட்டவர்கள் இருவருக்கும் துன்பம் வரும். ஆனால் குற்றம் செய்யாதவர்களுக்கு தேவ வாக்குதத்தம் உள்ளது. நம் சோதனையை நன்மைக்கு ஏதுவாக மாறும் என்ற விசுவாசம் கொள்ள வேண்டும்.

6. என் சோதனைக்கு என்ன காரணம் என்று தெரியாமல் உள்ளதா? இச்சமயத்தில் பாடுகளினால் அமிழ்ந்து போகாமல் உன் விசுவாசத்தை அறிக்கைச் செய். அவர் உன்னை ஆதரிக்கிறவராய் இருக்கிறார். அவர் உதவிக்கு பொருமையோடு காத்திரு.

“பாடுகள் என்றும் பரவசமே, என்றும் ஓடியே முடிக்கும் பந்தயமே” என்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஒரு பாடலின் வரிகள் இவ்வாறு கூறுகின்றன. நாம் பாடுகளுக்கு உள்ளாக செல்லும் போது யோபுவோடு சேர்ந்து நாமும் சொல்லுவோம். யோபு 23:10ல் ... அவர் என்னை சோதித்தபின் பொன்னாக விளங்குவேன்.



– Sis.Mercy Selwyn

3ம் வார தேவ வார்த்தை

# யாக்கோபு

## – சந்ததிக்கு ஆசீர்வாதம் –



"ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்" (எண் 24:17) என்று யாக்கோபின் சந்ததியிலே, இயேசு கிறிஸ்து பிறப்பார் என்பது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. இந்த யாக்கோபு, ஜெபத்தின் பதிலாக (ஆதி 25:21) ஈசாக்கு-ரெபேக்காள் தம்பதியருக்கு இரட்டைபிள்ளைகளில் இரண்டாவதாக பிறந்தவனாகும்.குணசாலியும், கூடாரவாசியாகவும் வாழ்ந்தவன் (ஆதி 25:27).'எத்தன்' எனப்பட்ட யாக்போபை ஆண்டவர் போராடி வென்றவன் என்று அர்த்தம் கொண்ட இஸ்ரவேலாக மாற்றினார். இவனது 12 ஆண் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்ட 12 கோத்திரதலைவர்களாக கருதப்பட்டார்கள். பின் நாட்களில் இந்த இஸ்ரவேல் என்ற பெயர் எபிரேய ஜனத்திற்கான பெயராக, விசுவாசிகள் அனைவருக்குமான பெயராக (ரோ 9:8) அழைக்கப்படுகிறது.

இந்த யாக்கோபுக்கு ஆண்டவர் 5 முறை தரிசனம் தந்து ஆசீர்வதித்துள்ளார் (ஆதி 28:13, 31:3, 32:29, 35:9, 46:3). தனி ஒரு மனிதன், தன் முழு சந்ததியாரால், 'கோத்திர பிதா' என்று அழைக்கப்படுவதோடு, அவன் சந்ததியார் அனைவருக்கும் ஆசீர்வாதமாக விளங்கினான். அவன் ஆண்டவரை தரிசித்த, ஐந்து முக்கியமான ஸ்தலங்களும் அங்கே அவன் எடுத்த சரியான தீர்மானங்களே அவன் வாழ்க்கையின் திருப்புமுனையாகவும், அவனது சந்ததியாருக்கே ஆசீர்வாதமாகவும் அமைந்தது.

1. பெத்தேல் (தேவனுடைய வீடு):

யாக்கோபு தன் அண்ணனுக்கு பயந்து, தப்பி ஓடும் வழியில்,ஒரு இரவு படுத்திருந்த இடம் 'பெத்தேல்' ஆகும். ஆபிரகாம் முதல் பலிபீடம் கட்டி ஆண்டவரை தொழுது கொண்டான் (ஆதி 12:7,8, 13:4). எந்த இடம் என்பதைக் கூட அறியாமல் தூங்கி கொண்டிருந்த போது, ஆண்டவர் யாக்கோபுக்கு தரிசனம் கொடுத்து, ஆசீர்வதித்தார் (ஆதி 28 :13-15). இந்த இடத்திலே யாக்கோபு ஒரு தூணை நிறுத்தி, "நான் தூணாக நிறுத்தின இந்த கல் தேவனுடைய வீடாகும்". "தேவரீர் எனக்கு தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசமபாகம் செலுத்துவேன்" (ஆதி 28:22) என்ற பொருத்தனைகளை செய்தான். அவன் தன் தேசத்திற்கு திரும்பி வந்தபோது , தன் குடும்பத்தோடு சென்று, அந்த இடத்திலே பலிபீடத்தைக் கட்டி ஆண்டவருக்கு பலியிட்டு, மறக்காமல் தன் பொருத்தனையை நிறைவேற்றினான் (ஆதி 35:7) .தரிசனம் தந்த தேவனுடன் பொருத்தனை செய்து அதை மறவாமல் நிறைவேற்றுகிறவர்களை ஆண்டவர் அவர்களது சந்தியார் அனைவருக்குமே ஆசீர்வாதமாக மாற்றுகிறார்.

2. மிஸ்பா (காவல் கோபுரம்):

21 ஆண்டுகள் பதான் அராமிலே தான் சம்பாதித்த மனைவிகள் 12 பிள்ளைகளுடன் தன் மாமாவுக்கு பயந்து, யாக்கோபு அவன் வீட்டை விட்டு ஓடி வரும் வழியில், தீங்கு செய்யும் முடிவுடன் துரத்தி கொண்டு வந்த லாபானுக்கு, ஆண்டவர் தரிசனம் தந்து, 'நீ யாக்கோபோடே நன்மையை அன்றித் தீமை ஒன்றும் போசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு' (ஆதி 31:29) என்று கண்டித்து யாக்கோபின் வீட்டாருக்கு லாபான் மூலம் ஒரு பொல்லாப்பும் ஏற்படாதபடி பாதுகாத்தார். மேலும் தன் மாமாவுடன் இருந்த கசப்பை மறந்து ஒருவருக்கொருவர் சமாதான உடன்படிக்கை செய்து கொண்ட இடத்திற்கு சாட்சியாக " மிஸ்பா" என்று யாக்கோபு பெயரிட்டான். நம் வாழ்வில் எல்லா சூழ்நிலைகளிலும் பொல்லாங்கானின் கைக்கு தப்புவிக்கும், காவல்கோபுரமாக நம் ஆண்டவர் இருக்கிறார் என்பதை அறிக்கையிடுவோரை ஆண்டவர் அவர்களது சந்ததியாருக்கே ஆசீர்வாதமாக பயன்படுத்துகிறார்.

3. மக்னாயீம் (இரண்டு சேனை):

யாக்கோபு தன் அண்ணனை குறித்த பயத்துடன் பிரயாணத்தில் வந்து கொண்டிருக்கும்போது, தேவதூதர்கள் அவனை சந்தித்தார்கள். அந்த இடத்திற்கு 'இரண்டு சேனைகள்' என்று பொருள்படும் 'மக்னாயீம்' என்று பெயரிட்டான் (ஆதி 31:1,2). அந்த இடத்தில் தானே தனது அண்ணனான ஏசாவை சாந்தப்படுத்தவும், அவனுடன் கொண்ட பகை மற்றும் பயஉணர்விற்கு தீர்வு கண்டு, அவனுடன், சமாதான உடன்படிக்கை செய்வதற்காகவும் தனக்கு முன்னே சமாதான தூதுவர்களை அனுப்பினான். இப்படி யாவரோடும் சமாதானமாயிருக்கவும் நாடுங்கள் (எபி 12:14) என்ற வாக்கின்படி, தன் சகோதர உறவை நாடும் ஒவ்வொருவரையும் ஆண்டவர், அவர்களது சந்ததியாருக்கே ஆசீர்வாதமாக பயன்படுத்துகிறார்.

4. பெனியேல் (தேவனுடைய முகம்):

ஆற்றண்டை யாக்கோபு தேவ சந்நிதியில் தனித்திருக்கையில், தான் சந்தித்த தூதனுடன் ராத்திரி முழுவதும் போராடினான். அந்த ஸ்தலத்திற்கு நான் தேவனை முகமுகமாய் கண்டேன் என்று சொல்லி 'பெனியேல்' என்று பெயரிட்டான்.தன்னை சந்தித்த தேவ தூதனிடம், 'நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போக விடமாட்டேன்'என்று போராடினான்.அங்கே ஆண்டவர் அவனை ஆசீர்வதித்தார். அவனுடைய பெயரை 'இஸ்ரவேல்' என்று மாற்றினார் (ஆதி 32:28,29). தேவனோடு தனிமையில் போராடி ஜெபிக்கும் அனுபவம் கொண்டோரை அவர்களது முழு சந்ததியாருக்கே ஆசீர்வாதமாக்குகிறார்.

5. பெயர்செபா (ஆணையின் கிணறு):

ஆபிரகாம், ஈசாக்கு ஆகிய இருவருமே வாழ்ந்த மற்றும் அபிமேலேக்குடனே சமாதான உடன்படிக்கை செய்து கொண்ட (ஆதி 21:32, 26:31) சரித்திர சான்றான இடம் 'பெயர்செபா' ஆகும். தனது பிரியமான குமாரன் உயிரோடிருக்கிறான் எகிப்து அனைத்திற்கும் அதிபதியாயிருக்கிறான். குடும்பமாக பஞ்சகாலத்திற்கு தப்பும்படிக்கு எகிப்திற்கு அழைக்கிறான் என்ற நற்செய்தியை அறிந்தவுடனே யாக்கோபு ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும் பெயர்செபாவிற்கு சென்று தேவனுக்கு பலியிட்டான். எகிப்திற்கு போவதை குறித்த முக்கிய முடிவெடுப்பதற்கு முன்னும் தேவ சமூகத்தை நாடினான். அப்போது ஆண்டவர், 'நான் உன்னுடனே எகிப்துக்கு வருவேன்' (ஆதி 46:1-4) என்று வாக்கு கொடுத்தார். இந்த இடமே அவன் வாழ்க்கையின் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.வாழ்க்கையிலே ஆண்டவர் ஆசீர்வாதமான நன்மைகளை கட்டளையிடும் போது, முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு முன், 'நன்றியுடன் தேவ சமூகத்தை நாடுவோரை' ஆண்டவர் அவர்களது சந்ததியாருக்கே ஆசீர்வாதமாக உயர்த்துகிறார்.

"தேவ சமூக பழக்கமுள்ளோர் பயங்கொள்ள மாட்டார்,
கீழ்படிய கற்றுக்கொண்டோர் தடுமாற்றம் கொள்ளார்"

- Rev.John David Raj

வாக்குத்தத்தமுள்ள

# முதலாங்கற்பனை

## பெற்றோருக்கு ஆசீர்வாதமாக இருப்பது எப்படி?

நமது தேசத்தில் சுமார் 2 கோடி பிள்ளைகள் அனாதைகளாக இருக்கின்றனர். பெற்றோர் கிடையாது, வசிக்க வீடு கிடையாது.உலகத்தை எட்டிப் பார்க்காமல், கருவறையிலேயே அழிக்கப்பட்டவர்களும் உண்டு. சிறுவயதில் பெற்றோரால் அனாதைகளாக விட்டுச் செல்லப்பட்ட பிள்ளைகளும், பல்வேறு காரணங்களினால் சொந்த பெற்றோரால் கொல்லப்பட்டப் பிள்ளைகளும் உண்டு. ஆகவே நமக்கு தேவன் தந்தப் பெற்றோருக்காக, அவர்களின் அன்பு தியாகத்திற்காக தேவனுக்கு எப்போதும் நன்றி செலுத்த வேண்டும். அதற்கு நன்றிக்கடனாக பெற்றோர்களிடத்தில் இறுதிவரை அன்பும், மரியாதையும் செலுத்துவது அவசியம். வேதத்தில் ஆதியாகமத்திலிருந்து ஒரு சிலரின் வாழ்வைக்குறித்து காண்போம்.

ஆதியாகமம் 22:9ல் ஒரு சில வேத விளக்கக் கையேட்டின்படி, (Bible commentaries) ஈசாக்கு பலியிடப்பட்டபோது 18-20 வயது நிரம்பிய வாலிபனாய் இருந்திருப்பான் என அறிகிறோம். வாலிப வயதில் ஈசாக்கு தகப்பனின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து உடன் செல்கிறான். கை கால்கள் கட்டபட்ட நிலையில் பலிபீடத்தில் கிடத்தப்படுகிறான். தகப்பனோடு வாக்குவாதம் பண்ணவில்லை. அடம் பிடிக்கவில்லை. எழுந்து ஓட நினைக்கவில்லை. ஆதி 22:16-18 வசனங்களில் தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை குறித்து வாசிக்கிறோம். ஈசாக்கின் கீழ்ப்படிதல், ஆபிரகாமுக்கும்,அவனது சந்ததிக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது.வாலிப தம்பியே / தங்கையே உனது கீழ்ப்படிதல் பெற்றோருக்கும், உன் சந்ததிக்கும் மாபெரும் ஆசீர்வாதம் கொண்டு வரும்.

ஆதியாகமம் 37:2ன் படி, யோசேப்பின் தனது வாலிப வயதில் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். தனது சகோதரரின் குற்றங்களைத் தன் தகப்பனுக்கு அறிவித்து வந்தான் என வாசிக்கிறோம். அதன் விளைவாக அநேக இடர்களைச் (சகோதரரின் பகை, வெறுப்பு, பலவருண அங்கி கழற்றப்படுதல், குழியில் போடுதல்) சந்தித்தாலும், கர்த்தர் யோசேப்போடே இருந்ததால் அவன் காரியசித்தியுள்ளவனானான் (ஆதி 41:41-43) என வாசிக்கிறோம். ஒரு தனி மனிதனின் கீழ்படிதலான, பரிசுத்தமான வாழ்வு, அவன் குடும்பத்திற்கும், சந்ததிக்கும், வெகு ஜனத்திற்கும் மாபெரும் ஆசீர்வாதத்தைக் (ஆதி 50:20) கொண்டு வந்ததைப் பார்க்கிறோம். வாலிப தம்பி தங்கையே! பெற்றோருக்கும் தேவனுக்கும் கீழ்ப்படிந்து வாழ, பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டு வாழ ஆயத்தமா? அப்படி வாழும் போது உங்களுக்கு மாத்திரமல்ல உங்களது குடும்பத்திற்கும் அநேக ஜனங்களுக்கும் தேவன் உங்களை ஆசீர்வாதமாக வைப்பார்.

**நீதி மொழிகளிலிருந்து ஒரு சில ஆலோசனைகள்:**

- பெற்றோரை சந்தோஷப்படுத்த கர்த்தருக்குப் பயப்படுகிற ஞானமுள்ள பிள்ளைகளாக இருக்க வேண்டும். (நீதி 10:1) புத்தியுள்ள பிள்ளைகளாய் இருக்க சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டும் (நீதி 10:5).
- பெற்ற தகப்பனுக்குச் செவிகொடுத்து, தாயை அசட்டை பண்ணக்கூடாது (நீதி 23:22)
- பெற்றோரை மகிழ்விக்க சத்தியம், ஞானம், உபதேசம் புத்தியை வாங்க பின்பற்ற வேண்டும் (நீதி 23:23-25).
- ஞானத்தில் பிரியப்படவேண்டும் (கர்த்தருக்குப் பயந்து, கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் நீதி 29:3

**உங்கள் பெற்றோரை கனம் பண்ணுவதற்கான சில வழிகள்:**

✤பெற்றோரைக் குறித்து எப்போதும் நேர்மறையான எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும். பெற்றோரிடம் அடிக்கடி பேசி தொடர்பு கொண்டிருக்க வேண்டும். உங்களது நன்றியுணர்வை அடிக்கடி வெளிப்படுத்த வேண்டும். உங்களுக்காக செய்த சிறிய காரியத்திற்காகவும், நன்றியுடன் புகழ்ச்சியையும் தெரிவிக்கலாம்.

✤பெற்றோருடன் வசிக்கின்ற நிலையில், வீட்டின் நியமங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். முட்டாள்தனமான / மதியீனமான வார்த்தைகளை உபயோகிக்காமல் கவனமாயிருக்கவேண்டும்.

✤உங்கள் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், பெற்றோருடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அவர்களை கனம் பண்ண வேண்டும்.

✤உனது ஆண்/பெண் நண்பர்களைவிட, பெற்றோர்களுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

✤பெற்றோருடன் அதிகார தொனியில் சத்தமாக பேசாமல், அமைதியாக பேச வேண்டும். Please, Sorry ஆகிய வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும்.

✤பெற்றோரின் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்ள வேண்டும். உங்களது நண்பர்கள் முக்கியமானவர்களை பெற்றோருக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.

✤நீங்கள் சந்திக்கும் பிரச்சனைகளைப் பெற்றோருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். முக்கிய தீர்மானங்களை எடுக்கும் போது, பெற்றோரின் கருத்தைக்கேட்க வேண்டும்.

✤வீட்டுக்காரியங்களில் உதவி செய்ய வேண்டும். முக்கிய தினங்களில் பெற்றோருக்கு அன்பளிப்பு கொடுக்க வேண்டும்.

✤பெற்றோரின் மனம் புண்படக்கூடிய செயல்களைச் செய்யக்கூடாது. பெற்றோரின் தவறுகளைப் பார்த்து பரியாசம் பண்ணி சிரிக்கக் கூடாது. நான் உங்களை நேசிக்கிறேன் என பெற்றோரிடம் அடிக்கடி சொல்ல வேண்டும்.

✤பெற்றோரைக் குறித்து பெருமைப்பாராட்ட வேண்டும். சமுதாயத்தில் சிறந்த நன்னடத்தை உள்ளவர்களாக வாழ்ந்து பெற்றோர் உங்களை குறித்து பெருமைப்பட செய்ய வேண்டும்.

வாலிபப்பிள்ளைகளே, பெற்றோருக்கு ஆசீர்வாதமாக இருக்க தீர்மானிப்போமா? பெற்றோருக்குக் கீழ்படிந்து நடப்போம்.ஆலோசனைகளை அசட்டை பண்ணாமல் மதித்து நடப்போம்.கனம் பண்ணுவோம். ஒளிவு மறைவில்லாத வாழ்க்கை வாழுவோம். பெற்றோரை நேசிப்போம். அவர்களது கடிந்து கொள்ளுதலைக் கேட்டு உங்களை சரிப்படுத்தி வாழ, தேவனுக்கு பயந்து, அவர் கட்டளைகளின்படி வாழ உங்களை அர்ப்பணிப்பீர்களா?

உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே **வாக்குத்தத்தமுள்ள முதலாங்கற்பனை**யாயிருக்கிறது.

எபே 6:2,3

– Sis.Latha Issac

# Coffee WITH REBECCA

# ரெபேக்காளுடன் இனிய சந்திப்பு



வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்.
புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு. நீதி 19:14

ஆபிரகாம் தன்னுடைய மகனாகிய ஈசாக்குக்கு பெண் கொள்ளும்படி தன் ஊழியக்காரனான எலியேசரை தன்னுடைய உறவினர் வாழும் தேசத்திற்கு அனுப்பினார். எலியேசர் இதை நிறைவேற்ற கர்த்தரையே சார்ந்துக் கொண்டார். தனக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுக்கும்படி கேட்கும்போது, தனக்கு மட்டுமல்ல, தன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுக்கும் பெண் தான் ஈசாக்குக்கு நியமிக்கப்பட்டவள் என அறிந்து கொள்வேன் என்று ஜெபித்தான். தேவன் அவன் ஜெபத்திற்கு கொடுத்த பதில்தான் ரெபேக்காள் (ஆதி 24:15-20). ஆம், அந்த ரெபேக்காள் அவர்களுடன் தான் நாம் உரையாட உள்ளோம்.

கேரீத் பேட்டியாளர் : வணக்கம் அம்மா!

ரெபேக்கா: வணக்கம், உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி

கேரீத் பேட்டியாளர் : குணசாலியான ஒரு பெண்ணுக்கு மாதிரியாக பல நேரங்களில் உங்களை தான் உதாரண மாக கூறுகிறார்கள். உங்களுடைய அனுபவங்கள் மற்றும் ஆலோசனைகள் இன்றைய வாலிப பெண்களுக்கும், திருமணத்திற்கு காத்திருப்பவர்களுக்கும் நிச்சயமா உதவும்னு நினைக்கிறேன்.



ரெபேக்கா: திருமணம்னு சொன்னதும் பழைய ஞாபக ங்கள் எல்லாம் கண் முன்னாடி வந்து போகுது. நான் ஒரு நாளும் கனவு கூட கண்டது இல்ல எனக்கு இப்படி ஒரு வாழ்க்கையும் இவ்வளவு நல்ல கணவரும் கிடைப்பார்னு.

கேரீத் பேட்டியாளர்: ஆமாம்! படிக்கும் போது ஏதோ Fairy tale மாதிரி தான் Feel ஆகுது. ஆனா, உங்க மாமா ஆபிரகாமின் ஜெபமும், வேண்டுதலும் எப்படி வீண்போகும். உங்க கணவர் ஈசாக்கு உங்களை போன்ற ஒரு பெண்ணுக்காகத் தானே ஜெபத்தோட காத்திருந்தார்.

ரெபேக்கா: சரியா சொன்னீங்க, நம்முடைய எதிர்கால வாழ்க்கைத் துணைக்காக பெற்றோர் ஜெபிப்பது மட்டும் போதாது. அவர்களோடு நாமும் ஜெபித்து தேவத் திட்டத்திற்காக காத்திருக்கணும். அவருடைய சித்தம் எதுவாக இருந்தாலும், அதற்கு கீழ்படிய தயாராகவும் இருக்கணும்.

கேரீத் பேட்டியாளர்: சரியா சொன்னீங்க. உங்களுக்கு எப்படி அந்த மாதிரி கீழ்படிய முடிஞ்சது? 800 கிலோ மீட்டருக்கு அந்த பக்கம் இருக்க ஒருத்தர பார்க்காம, ஒரு வேலையாளோட வார்த்தையை மட்டும் நம்பி எப்படி போக துணிஞ்சீங்க.

ரெபேக்கா: எலியேசரோட தாழ்மையும், உண்மையும் என்னை ரொம்பவே ஆச்சரியப்படுத்தியது. ஒரு எஜமான் நல்லவரா இருக்க முடியும், என் மாமா எந்த அளவு கடவுளுக்கு பயந்து நடக்கிற மனுஷனா இருந்திருப்பார்னு, எலியேசரோட நடவடிக்கையிலிருந்தே தெரிந்து கொண்டேன்.

கேரீத்பேட்டியாளர்: தண்ணீர் அவருக்குத்தானே கேட்டார்?

ரெபேக்கா: தண்ணீரின்றி அவர் மட்டும் இல்ல, அந்த ஒட்டகங்களும் தான் களைத்திருந்தன. அதை பார்க்கும் போது நானாகவே தண்ணீர் தர ஒப்புக் கொண்டேன். ஒரு ஒட்டகம் சாதாரணமா 100 லிட்டர் தண்ணீர் குடிக்கும்!

கேரீத் பேட்டியாளர்: அம்மாடி! சரியா Bent கழந்தி ருக்குமே. இந்த காலத்துல பெரியவங்க உதவி கேட்டா முகத்தை திருப்பிக் கொள்வதும், காதில் விழாத மாதிரி செல்வதும், இல்லை என்று சொல்வதும் சகஜம். உபசரித்தல் என்பது பெண்களுக்குரிய சிறப்பியல்புகளுள் ஒன்று. சில பெண்கள் தன் வீட்டாரை மட்டும் நன்றாக உபசரித்து விட்டு, கணவன் வீட்டாரை சரிவர கவனிப்பதில் லை. கிரியையில்லாத விசுவாசம் செய்தது.

ரெபேக்கா: ஆமாம்! என்னுடைய ஈகை குணத்திற்கு கடவுள் தந்த பரிசுதான் குணத்தால் பொறுமை சாலியான, பக்தியுள்ள நல்ல கணவன். இன்னோரு விஷயமும் சொல் லணும். என்னதான் எலியேசர் நகை நட்டு கொடுத்தாலும் என் அப்பா, அம்மா என்னோட சம்மதத்தையும் கேட்டாங்க. அதுக்கு முன்னுரிமை கொடுத்தாங்க.

கேரீத் பேட்டியாளர்: உங்க கணவரை முதல் முதல் சந்தித்த தருணம்?

ரெபேக்கா: அவர் அப்போ அவங்க அம்மாவை இழந்த கவலையில் இருந்தார். நான் அவரை பார்க்கும் போது ஜெபித்துக் கொண்டிருந்தார். அவரும் என்னை நேசித்தார். எனக்கு குழந்தையில்லாமல் நான் ம லடியாயிருந்த போதும் என்னை ஒதுக்கிடாம எனக்காக ஜெபித்தார்.

கேரீத் பேட்டியாளர்: ஈசாக்கு துக்கமாக இருந்த போது ஆபிரகாம் என்ன செய்தார்? எலியேசர் குழப்பமாயிருந்த போது என்ன செய்தார்? இருவரும் ஜெபம் செய்தார்கள். இந்த பொருத்தம் இறைவனால் வந்திருக்கிறது.

அன்பானவர்களே! திருமணங்கள் ஆண்டவர் முன்னின்று நடத்தும் திருமணங்களாக அமையும்போது, அவை அவரின் சித்தத்தை நிறைவேற்றுகின்றன. ஆண்ட வரை மறந்து விட்டு, படிப்பு, பணம், அந்தஸ்து, அழகு போன்ற மற்ற விஷயங்களின் மீது அதிக கவனம் செலுத்தும் போது, திருமணங்கள் பெரும்பாலும் தோல்விப் பயணத்தின் தவறான துவக்கமாக அமைந்து விடுகின்றன.

- Mrs.Angel

கிறிஸ்தவர்கள்

# காதலிக்கலாமா?

வாலிபர் மற்றும் இளம் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்கிற படியால் 3 நாள் முகாம் மற்றும் கூடுகைகளுக்கு செல்லும் போது இன்றைய இளைய தலைமுறையினரிடம் உள்ள பலவிதமான கேள்விகளை அவர்கள் எழுதி போடுவது வழக்கம்.இப்படிப்பட்ட கேள்விகள் அவர்கள் தேவனுடைய ராஜ்யபணியில் தங்களை தீவிரமாக ஈடுபடுத்திக்கொள்ள தடையாக இருக்கிறது என்று நினைக்கிறேன்.ஆகவே கேரீத் மாத இதழில் இளைஞர்களின் கேள்விகளுக்கு பதில் அளிப்பதே இப்பக்கத்தின் நோக்கம்.இவற்றை ஆலோசனையாக எடுத்து கொண்டு அவரவர் தனிப்பட்ட சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்துங்கள். இம்மாதம் பிப்ரவரி 14 காதலர் தினமாக அநேக இளைஞர்கள் அனுசரிக்கின்றனர். இக்கேள்வியை எல்லா முகாம்களிலும் தவறாமல் யாராவது எழுதி போடுவது வழக்கம்.

### கிறிஸ்தவர்கள் காதலிக்கலாமா? காதலிப்பது பாவமா?

காதலிப்பது தவறே இல்லை ஆனால் எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. திருமணமாகி உனக்கு வாழ்க்கை துணையாக வரும் ஒரு துணையை நீ நேசிக்க வேண்டும், காதலிக்க வேண்டும்.ஆனால் திருமணத்திற்கு முன்பு படிக்கும் பருவத்தில் வரும் காதல் என்பது எல்லாம் ஒரு மோகம் மட்டுமே. நீங்கள் பள்ளியில் அல்லது கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தால் (13-21) வயது வரை உங்கள் படிப்பில் மட்டுமே அதிக கவனம் செலுத்த வேண்டிய காலம் இது. நீங்கள் ஒரு வேலையில் இருந்தால் 21-25 வயது வரை உங்கள் வேலையில் மட்டுமே அதிக கவனம் செலுத்த வேண்டும்.நீங்கள் இவ்விரு தீர்மானங்களில் அல்லது தெரிந்தெடுப்புகளில் ஞானமாய் செய்தால் திருமணக்காரியத்தை நன்றாக கையாளும் நிலையில் இருப்பீர்கள்.நீங்கள் 13 அல்லது 15 வயதிலே காதல் மற்றும் திருமணத்தை குறித்து நினைத்தால் உங்கள் வாழ்க்கை திசை மாறிவிடும்.13லிருந்து 20 வயது வரை நீங்களே யார் என்று உங்களுக்கே தெரியாது. எப்பொழுது என்ன மனநிலையில் இருப்பீர்கள் என்றும் உங்களுக்கே தெரியாது.இந்த நிலையில் மற்றொருவரை உங்களோடு இணைத்துக் கொண்டால் இருவருக்கும் வாழ்க்கை முழுவதும் குழப்பமாகவே மாறி விடும்.எதிர்காலம் மோசமாகிவிடும்.உங்கள் நேரத்திற்காக காத்திருங்கள்

இப்படிப்பட்ட படிக்கும் காலத்தில் அல்லது ஆண்டவர் உங்களுக்கு கொடுத்த பணிகளில் கண்டதும் காதல் என்று ஆரம்பித்தால் படிக்கிற படிப்பிலோ, உங்கள் வேலையிலோ கவனம் செலுத்த முடியாது. வெற்றி பெறவும் முடியாது. ஆகவேதான் எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு என்று சாலமோன் ஞானி கூறுகிறார்.ஆகவே படிக்கும் காலத்தில் நல்ல நிலையான வேலையில் அமரும் முன் உங்களுக்கு தோன்றுவது காதல் அல்ல அது மோகமே. அது "Puppy love", infactuation என்ற ஆங்கிலேயப் பதற்திற்கு ஆக்ஸ்போர்ட் அகராதி தரும் விளக்கம் "ஒரு முட்டாள்தனமான கவர்ச்சி" என்பதாகும். இது காதல் அல்ல. காதலர்களுக்கு பொறுமை என்பதே இல்லை. அவரது ஆசை நிறைவேறும் வரை அமைதலற்று அலையும் கடல் அலையாய் இருக்கின்றன.உண்மை யான காதல் பொறுமையும், பொறுப்பும் பெற்றிருக்கும்.

காதலிப்பது தவறா என்றால் "காதலில் விழுதல்" (Falling in love) என்ற சொற்றொடரை கவனியுங்கள். விழுதல் என்பது சரியா தவறா என்று யாராவது கேட்க முடியுமோ? சரியா, தவறா என்பது காரியம் அல்ல. அது வேதனையையும், காயத்தையும் உண்டாக்கும் என்பது தான் காரியம். கற்பனை காதலின் உலகச் சின்னம் என்பது கூரிய அம்புகளால் குத்தப்பட்ட இரத்தம் வடியும் இதயம் என்பது உங்களுக்கு தெரியும். வேதனையை தவிர எதுவும் இல்லை என்பதை அது காட்டுகிறது. திருமணத்திற்கு பிறகு உங்கள் மனைவியை நேசிக்கலாம். அவர்களோடு எங்கும் போகலாம். முழு வாழ்வையும் உங்கள் வாழ்க்கை துணையுடன் செலவு செய்யலாம். ஆனால் உங்கள் வாலிப நாட்களில் விலையுயர்ந்த நேரங்களை பூங்காவிலும், மால்களிலும், ஐஸ்கிரீம் கடைகளிலும், உணவகங்களிலும் செலவழிப்பது என்பது உங்கள் தாலந்து, திறமை ஆகியவற்றை வீணாக்குவதற்கு சமம். நீங்கள் கடவுளுக்காக எதையாவது சாதிக்கும் நேரங்களை பிசாசு வழி திருப்பவே இது போன்ற கண்டதும் காதல், உண்மைகாதல், தெய்வீக காதல் என்ற பொய்யான மாயையான காரியத்தை திரைப்பட உலகம் உங்களுக்கு காட்டுகிறது. கற்பனை காதலில் உன் வாழ்வை விரய மாக்காதீர்கள். உங்கள் இளவயதின் ஆற்றலை தேவனுக்கு கொடுங்கள் அவருக்காக ஓடுங்கள்.

### காதலில் விழுதலின் விளைவுகள்:

### தெரிந்தெடுப்பு உன்கையில்

1.உனக்கும் ஆண்டவருக்கும் உள்ள உறவை துண்டிக்கும் நிலை உண்டாக்கும். தேவசத்தம் கேட்காது திறமை தாலந்துகள் விரயமாகும்.

2.உனக்கும் உன் பெற்றோருக்கும் உள்ள நம்பிக்கையின் உறவை துண்டிக்கும். அநேக பொய் மற்றும் மறைக்க வேண்டிய சூழ்நிலை வரும்.

3.மாணவராக இருந்தால் படிப்பில் கவனக்குறைவு வரும் மதிப்பெண் குறைவாகும்.தேவன் உன்னைக்கொண்டு செய்ய நினைத்த திட்டம் நிறைவேறாமல் தடைப்படும்.

4.வேலை செய்பராக இருந்தால் வேலையில் கவனமும், சிறப்பாக செயலாற்றவும் முடியாது. நற்பெயரை காப்பற்றவும் முடியாது. உயர்வும் வராது.

5.குற்ற உணர்வும் எதிர்காலத்தை குறித்த பயமும் உன்னை ஆட்கொள்ளும்.உன் மனதும் உடலும் கறைபட்டு வாழ்நாள் முழுவதும் கறைபட்டே இருக்கும் நிலை. ஏற்படும்.

### காதலில் விழாததினால் வரும் ஆசீர்வாதம்

♦ ஏற்ற நேரத்தில் தேவன் உனக்கு என்று நியமித்திருக்கும் நபருக்கு நேராக வழிநடத்துவார்.தேவதிட்டம் உன் வாழ்வில் நிறைவேறும், உன்னுடைய சமாதானம் நிலைத்திருக்கும்.

♦ குற்றஉணர்வில்லாததிருமணவாழ்வும்,உன் வாழ்க்கைத் துணைக்கு கறைபடாத உள்ளத்தையும், உடலையும் பரிசளிக்கும் வாய்ப்பும் உண்டாகும்.

♦ அநேகருக்கு உன் வாழ்வு சாட்சியாக இருக்கும். தேவ நாமம் உன் மூலமாக மகிமைப்படும்.

♦ கல்வி மற்றும் வேலையில் பணி உயர்வும், எதிர்காலத்தை குறித்த பயமும் இல்லாமல் இருப்பாய்.

ஆனால் திருமண வயது வந்துவிட்டபின் குறைந்தது ஆண்களுக்கு 25 பெண்களுக்கு 22க்கு மேல் வந்ததும் இப்படியே காதல் உணர்வு வந்தால் தேவன் உங்களை குறிப்பிட்ட நபருக்கு நேராக நடத்துவதாக உணர்ந்தால் அதை குறித்து ஜெபியுங்கள். உங்கள் பெற்றோர் மற்றும் ஆவிக்குரிய ஆலோசகருடன் கலந்தாலோசியுங்கள்.





## காதலில் விழாமல் இருக்க சில ஆலோசனைகள்:
## தெரிந்தெடுப்பு உன் கையில்:

♦Empty mind is Devils worshop - உங்கள் மனதை எப்பொழுதும் எதாவது ஒரு வேலையில் இணைத்து ஈடுபடுத்திக் கொண்டே இருங்கள்.

♦ஒரு நபரை ஒருமுறை பார்த்தாலே உணர்ச்சி வசப்படுகிறீர்கள் அல்லது அந்த நபரது வளையல்கள்,கண்ணாடி, இருசக்கரவண்டி, கைக்கடிகாரம் போன்ற பொருட்களை பார்த்தலே மோக எண்ணத்தை கொண்டு வந்தால் நினைவில் வரும்போதே அதை துண்டிக்க செய்து கட்டுப்படுத்த முயற்சியுங்கள்.வளரவிடாதிருங்கள்.

♦அந்நபரது தொலைபேசி எண் மற்றும் வாட்ஸ் அப், பேஸ்புக் போன்ற தொடர்பை துண்டி த்து விடுங்கள்.அவற்றை Delete செய்யுங்கள். வேதவசனம்,ஜெபம் போன்றவற்றில் நேரத்தை அதிகப்படுத்தி தியானியுங்கள்.

♦என்னுடைய வாழ்வு தேவனுக்கோ, என் குடும்பத்தினருக்கோ கெட்டபெயரையோ, தலைகுனிவையோ தரக்கூடாது என மனதில் தீர்மானம் எடுங்கள்.

♦24/7 தேவன் என்னை பார்த்து கொண்டே இருக்கிறார் என்ற தெய்வ பயத்தை உங்களில் அதிகரியுங்கள். தேவன் எனக்கென்று நியமித்திருக்கிற நபரை கொண்டு வரும் வரை பொறுமையுடன் காத்திருப்பேன் என தீர்மானம் எடுங்கள்.

♦வாழ்க்கை துணைக்காக 15 வயதிலிருந்தே ஜெபிக்க ஆரம்பிக்கலாம்.ஒரு நபரை மனதில் வைத்துக்கொண்டு அல்ல. தேவனிடம் தெரிந்தெடுத்தலை விட்டு விட வேண்டும்.

♦Rule of 3 Three's - 3 நபராக பேசுங்கள். (எதிர்பாலரோடு தனிமையில் பேச வேண்டாம்) 3 நிமிடத்துக்குள் பேசிமுடியுங்கள். (அதிக நேரம் பேசவேண்டாம்) 3 அடி இடைவெளி விட்டு பேசுங்கள் (தொட்டு பேச வேண்டாம்)

### 4 Reasons why people don't understand Bible

1. No belief
 - Heb.11:6; 3:18,19
2. Lack of desire to learn - 1Pet.2:2
3. Laziness - II Tim.2:15
4. Lost out - I Cor.2:1

வாலிபன் ஒரு வாலிபப் பெண்ணை விரும்புவது இயல்பானதே. எதிர்பாலின ஈர்ப்பு இருக்கத்தான் செய்யும். ஆனால் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய எச்சரிக்கை உண்டு. பார்த்தவுடன் ஒருவித உணர்ச்சிக்கு அடிமையாகி சற்றும் நிதானிக்காமல் இங்கு அகப்பட்டோர் அநேகர். தினமும் கல்லூரிக்குப் போய் படித்து வந்தாலே நல்ல மார்க் எடுப்பது அநேகருக்கு கடினமான காரியம்.அதிலும் இப்படி உணர்ச்சிக்கும்,கவர்ச்சிக்கும் அடிமைப்பட்டுவிட்டால் அரியர்ஸ் இல்லாமல் இருக்காது. நல்ல மார்க் எடுத்தாலே வேலை கிடைக்காத காலம் புத்தியுள்ள நபர் காதலிக்க நேரமில்லை என்று சொல்லி பிழைத்துக் கொள்வார்கள். உங்களின் எண்ணத்திலும் சிந்தையிலும் வரும் பகல் கனவுகளை விரட்ட வேதம் என்னும் ஜீவத்தண்ணீரைப் பருகுங்கள்.அதிகாலையில் நீங்கள் தியானித்ததை அசைபோடுங்கள்.பாவிகளின் வழிகளில் நில்லாதேயுங்கள்.என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்று அறிக்கை செய்யுங்கள்.

வேதபுத்தகம் பிரசங்கி 11:9 இல் மறைமுகமாக நம்மை எச்சரிக்கிறது.வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு நிறுத்துவார் என்று அறி! மேலும் வேதாகமம், பிதாவின் சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் எனப் போதிக்கிறது. மேலும் உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் என்றும் கூறுகிறது (சங்கீதம் 37:5).

## THE FACTS WHICH ARE FASCINATING IN THE BIBLE:

The word love appears 314 times
The word love's appears once
The word loved appears 98 times
The word lovedest appears twice
The word lovely appears 4 times
The word lover appears 4 times
The word lovers appears 23 times
The word loves appears twice
The word loveth appears 65 times
The word lovest appears 12 times
The word loving appears 3 times
The word loving kindness appears 26 times
The word loving Kindnesses appears 4 times

BIBLE

B-Basic
I-Instruction
B-Before
L-Leaving
E-Earth

" God is love" என்று அநேகர் சொல்லியும், அனுபவப்பட்டும் இருப்போம். ஆனால் ஆண்டவர் பரிசுத்தர் என்பது எல்லாவற்றையும்விட மிக மேன்மையான ஒரு விஷயம். வேதத்தில் ஏதாவது ஒரு காரியத்தை இருமுறை எழுதியிருந்தால் அதை மிக முக்கியமாகக் கருதுகிறோம். அதையே மூன்றுமுறை கூறினால் அது மிகவும் உயர்ந்த விஷயமாகவும் முக்கியமாகவும் இருக்கும். ஆண்டவரை மேன்மைப்படுத்தும் விதமாக வேதத்தில் 3 முறை கூறப்பட்டுள்ள வார்த்தை பரிசுத்தர், பரிசுத்தர்,பரிசுத்தர்!! ஆம் இது உண்மையாகவே மேன்மையான விஷயம் தான்!!

**தெரியுமா உங்களுக்கு?**

முழு வேதாகமத்தை 70 மணி நேரத்தில் சத்தமாக வாசித்து முடித்து விடலாம்!

- Bro.Selwyn





# யோசேப்பு

## குடும்பத்திற்கு ஆசீர்வாதம்

## ' பெருக்கம் '

'யோசேப்பு கனிதரும் செடி (ஆதி 49:22) அவன் மேய்ப்பனும், இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்' (ஆதி 49:24) என வாசிக்கிறோம்.

'யோசேப்பு கனிதரும் செடி. அவன் மேய்ப்பனும், இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான்' என வாசிக்கிறோம் (ஆதி 49:22, 24). உண்மையிலே யோசேப்பு ஒரு தனி தரும் செடியாக, அவன் குடும்பத்தாருக்கு மேய்ப்பனாகவும், இஸ்ரவேல் (யாக்கோபு) வம்சத்தாருக்கு கன்மலையை போலிருந்தான் என்பதில் சந்தேகமில்லை. அவன் தன் முழுகுடும்பத்திற்கும் ஜீவ ரட்சனை செய்யும் அளவுக்கு ஆசீர்வாதமாக விளங்கினான்."பெருக்கம்" என்ற பொருள் கொண்ட பெயரையுடைய யோசேப்பு அவனது குடும்பத்தாரின் பெருக்கத்திற்கும் ஆசீர்வாதத்திற்கும் காரண மாயிருந்தான்.

### யோசேப்பு யார்?

➢ கி.மு. 1746ல் பதான் அராமில் யாக்கோபுக்கு, ராகேல் பெற்ற இரண்டு குமாரரில் அவன் மூத்தவன்.
➢ முதிர்வயதில் பிறந்த இவன் தனது நற்குணத்தினிமித்தம், தன் தகப்பனுக்கு மிகவும் பிரியமாயிருந்தவன்.
➢ தன் உடன் பிறந்த 11 சகோதரர்களால் தான் கண்ட சொப்பனங்களினிமித்தம் பகைக்கப்பட்டவன் (ஆதி 37:5,11).
➢ ஆடு மேய்க்கும் அண்ணன்மாருக்கு ஆகாரம் கொண்டு சென்றவன், குழியிலே போடப்பட்டவன் (ஆதி 37:24).
➢ எகிப்துக்கு சென்ற இஸ்மவேலர் கையில் அடிமைகளாய் 20 வெள்ளி காசுகளுக்கு விற்கப்பட்டவன் (ஆதி 37:28).
➢ செய்யாத குற்றத்திற்காக சிறையில் தள்ளப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவன் (ஆதி 39:20).
➢ இராஜாவின் சொப்பனத்திற்கு அர்த்தம் சொன்னதினிமித்தம் நாட்டிற்கு அதிபதியானவன் (ஆதி 41:41).
➢ உணவு கிடங்குகள் தொடங்கி, தானியங்களை வாங்கி சேமிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்தவன் (ஆதி 41:48).
➢ உணவு பகிர்முறையை (Ration system) உலகில் முதன் முதலில் செயல்படுத்தியவன் (ஆதி 41:56).
➢ தனி ஒரு மனிதன் தனது குடும்பத்திற்கு, நாட்டிற்கு ஆசீர்வாதமாயிருந்தான்.

### எதினால் ஆசீர்வாதமாயிருக்க முடிந்தது:

❖கர்த்தர் யோசேப்புடனிருந்தார். யோசேப்பு கர்த்தரோடு நெருக்கிய உறவு கொண்டவனாயிருந்தான் (ஆதி 39: 2,21,23).
❖தன் சகோதரர் செய்து வந்த துன்மார்க்க செயல்களுக்கு உடன்படாதவன் (ஆதி 37:2).
❖ஆசை இச்சைக்கு, இணங்காது அந்த சூழ்நிலையை விட்டோடினான் (ஆதி 39:15).
❖பரிசுத்தத்தை காத்து கொண்டதின் பரிசாக கிடைத்த சிறைவாசத்தை முறுமுறுப்பின்றி சகித்தான் (ஆதி 39:20).
❖விலை பேசி விற்றவர்களுக்கும் விருந்தோம்பல் செய்து அன்பை வெளிப்படுத்தினான்.
❖அந்நிய அரசன் மூலம் தேவஆவியை பெற்ற விவேகமும், ஞானமும் உள்ளவன் என நற்சாட்சி பெற்றவன் (ஆதி 41:38,39).
❖கடந்த கால பாடுகளையும் வேதனைகளையும், தேவ சித்தமாக ஏற்று கொண்டவன் (ஆதி 45:8).
❖உயர்ந்த உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்ட நிலையிலும் தகப்பனை கனப்படுத்தியவன் (ஆதி 46:29).
❖தன் சந்ததியாரும், தன் கோத்திர பிதாக்களின் வரிசையில் பங்கு பெற ஆசீர்வக்கப்பட்டவன் (ஆதி 48:9).
❖தன் தகப்பனின் கடைசி கால விருப்பத்தையும் தவறாமல் நிறைவேற்றியவன் (ஆதி 50:13).
❖கானான் தேசத்திற்கு திரும்பி செல்வதை தீர்க்கதரிசனமாக உரைத்து, விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பிடித்தவன் (எபி 11:22).

### எப்படி குடும்பத்திற்கு ஆசீர்வாதமாயிருந்தான்?

⇨கானான் தேசத்திலே கடுமையான பஞ்சத்தினால் வருந்துகிற (யாக்கோபின்) குடும்பத்திற்கு தானியம் கொண்டு போய் கொடுத்திட ஏற்பாடு செய்து கொடுத்து, குடும்பத்தை ஆதரித்தான் (ஆதி 42:19).
⇨தன்னுடைய சகோதரர்களுக்கு தான் யோசேப்பு என்ற உண்மை தெரியவந்தபோது, என்னை இவ்விடத்திற்கு வரும்படி விற்று போட்டதினால் நீங்கள் சஞ்சலப்படவும், விசனப்படவும் வேண்டாம் என குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினான்.
⇨பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்கவும் ... உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார் (அதி 45:7) என தான் எகிப்திற்கு கொண்டு வரப்பட்டதை தேவ திட்டமென குடும்பத்தாருக்கு அறிவித்தான்.
⇨ யாக்கோபாகிய நீரும், உம்முடைய பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளும்... கோசேன் நாட்டில் வாசம் பண்ணி, என் சமீபத்தில் இருக்கலாம் (ஆதி 45:10) என குடும்பத்தாருக்கு ஆலோசனை கொடுத்தான்.
⇨"யாக்கோபாகிய" உமது குடும்பத்தாருக்கும் உமக்கு இருக்கிற யாவற்றிற்கும் வறுமை வராதபடிக்கு, அங்கே உம்மைப் பராமரிப்பேன் (ஆதி 45:11) என குடும்பத்தாருக்கு அன்பு காட்டினான்.
⇨வயது முதிர்ந்த பெற்றோர், பெண்களும், பிள்ளைகளும், எகிப்து தேச பிரயாணப்பட அவர்களுக்கு வண்டிகளையும் அப்பமும், தின்பண்டங்களும் அனுப்பினவன் (ஆதி 45:21-23).
⇨ கால்நடைகளுக்கு ஆகாரம் கிடைக்கும் வண்ணமாக, யோசேப்பு எகிப்து தேசத்திலே நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டிலே சுதந்திரம் கொடுத்து அவர்களை குடியேற்றி தன் குடும்பத்தாரின் அத்தியாவசிய தேவைகளை சந்தித்தான் (ஆதி 47:11).
⇨ எகிப்து தேசத்தில் குடியேற்றிய பின்னரும், யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும், தன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் அவர்கள் குடும்பத்திற்கு தக்கதாய் ஆகாரம் கொடுத்து குடும்பத்தாரை ஆதரித்து வந்தான் (ஆதி 47:12).
⇨ தகப்பனின் மறைவிற்கு பின்பு பயந்து கொண்டிருந்த, தன் உடன்பிறப்புகளுக்கு, "...பயப்படாதிருங்கள், நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன்" (ஆதி 47:21) என்று குடும்பத்தாருக்கு ஆறுதலாயிருந்தான்.

### நாம் என்ன செய்ய போகிறோம்?

இன்று குடும்பங்களிலே, சகோதர,சகோதரிகளிடையே அன்பு இல்லை. பாசமுமில்லை. ஒருவருக்கொருவர் பகை உணர்வுடனும் வெறுப்புடனும் வாழ்ந்து வருகின்றனர். ஏதோ ஒரு காலத்தில் ஏற்பட்ட ஒரு சில கசப்பான அனுபவம் தங்கள் வாழ்நாள் முழுவதும், மனதில் வைத்துக்கொண்டு வாழ்கின்றனர். தங்கள் குடும்பத்தாரை மன்னிக்க முடியாது, ஒருவருக்கொருவர் விரோதம ான செய்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கிடையே உள்ள இடைவெளி நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. இதில் நாங்கள் ஆவிக்குரியவர்கள் என்று சொல்லுகிறவர்களுக்கும் விலக்கல்ல. இப்படிப்பட்ட நமக்கு ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்ற யோசேப்பு நல்லதோர் சாட்சி. நாம் பின்பற்ற கூடிய சரியான முன் மாதிரி. யோசேப்பை வழி காட்டியாக கொண்டு நாமும் ஒருவர் குற்றங்களை ஒருவர் மன்னித்து நம்முடைய குடும்பத்தாரின் ஆசீர்வாதத்திற்காக வாழ்ந்திட தேவன் தாமே கிருபை செய்வாராக.

"மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம். இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்"

Rev.John David Raj



# கொக்கித் திரை விடுபட

# How to overcome Gadget addiction

**ஹலோ !** இளம் நண்பர்களே எப்படி இருக்கிறீர்கள்? கடந்த மாதம் கொக்கி திரையிலிருந்து விடுபட எல்லோரும் ஜெபித்து தீர்மானம் எடுத்திருப்பீங்கன்னு விசுவாசிக்கிறேன்.எடுத்த தீர்மானத்தை கடைபிடிக்க ரொம்ப கஷ்டமா இருக்கா Friends. நம்ம தேவனிடம் நம்மை முழுமையாக ஒப்படைத்து Gadget- போதையிலிருந்து விடுபட ஒவ்வொரு நாளும் பிரயாசப்படவேண்டும். நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற எல்லா பாவ திரைகளிலிருந்து விடுபட ஜெபித்து சில காரியங்களை கைக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். சொல்றது எல்லம் easy, செய்வது மிக கடினம்ன்னு சொல்றிங்களா? கஷ்டப்பட்டு Gadget addictionல இருந்து வெளியே வந்திட்டீங்கன்னா, நீங்க இஷ்டப்படுற வெற்றியுள்ள வாழ்க்கை வாழலாம். சிகரம் தொடலாம்.

20% இளம் வயதினர் Physiotherapy (எலும்பு நிபுணர்) டாக்டரிடம் செல்கின்றனர். காரணம் சிறு வயதிலேயே முதுகு எலும்பு பிரச்சனையின் நிமித்தம் செல்கின்றர். Gadget- பார்த்துக்கொண்டே இருப்பதால், இடுப்பு வலி, முதுகுவலி, தலைவலி, கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒற்றை தலைவலி, நரம்பு தளர்ச்சி, கழுத்துவலி, கண்புற்றுநோய், கதிர்வீச்சு தாக்குதல் இன்னும் அநேக புதிய நோய்கள் தாக்குகின்றன. ஒரு மனநல ஆலோசகரிடம் ஒரு நாளில் செல்லும் நோயாளிகளில் 20% பேர் Gadget addictionல இருந்து வெளிவர ஆலோசனைக் கேட்டக செல்கின்றனர் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.Whatsappல் ஒரு குட்டி பெண் நரம்பு தளர்ச்சியினால் எவ்வளவு கஷ்டப்பட்டாள் என்று நம்மில் அநேகர் பார்த்திருப்போம். அது அந்த குழந்தை போன் உபயோகப்படுத்தியதின் விளைவு என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். ஒரு அம்மா பையனிடம் போனை வாங்கியதால், அந்த இளம் பையன் தற்கொலை செய்து கொண்டான். ஒரு ஆய்வில் தெரிய வந்த அதிர்ச்சி செய்தி என்னவெனில் பள்ளிக்கு செல்வோர் புத்தகத்துடன் கூட விலை உயர்ந்த Gadget ஐயும் எடுத்து செல்கின்றனர். அது மட்டும் அல்ல Gadget- போதையில் உள்ளோருக்கு Dry eye பிரச்சினை விரைவாக பரவி வருகிறது என்று கண் மருத்துவர் வேதனையுடன் கூறுகிறார்.

## எப்படி இதிலிருந்து வெளிவருவது?

➢சமூக வலைதளங்களிலிருந்து வெளியே செல்ல நல்ல நண்பர்களிடம் அமர்ந்து பேசலாம்.

➢நமக்கு பிடித்த உபயோகப்படக்கூடிய வேலையை செய்யலாம்.

➢எப்போதும் நம்மை busyஆக வைத்துக் கொள்ள வழிமுறைகளை கையாளலாம்.

➢Gadget-யை ஒரு போதும் தூங்கும் அறைக்கு எடுத்து செல்வதை தவிர்க்கலாம்.

➢சாப்பிடும் போது நம் முன்பு அமர்ந்திருப்போரிடம் பேசலாம்.

➢சில மணி நேரங்கள் எல்லா Notification-யை அணைத்து வைக்க வேண்டும்.

➢சில மணி நேரம் நமது போனை Switch off செய்ய வேண்டும்.

➢Flight mode ல் வைத்து விட்டு நம் குடும்பத்தினருடன் அமர்ந்து பேசலாம்.

➢வீட்டில் நீங்கள் இருக்கும் அறையில் போனை வைக்காமல் மற்றொரு அறையில் வைக்கலாம்.

➢Creative project செய்யலாம். தோட்டம் அமைக்க முயற்சி எடுக்கலாம்.

## நல்யோசனை உன்னை காப்பாற்றும் (நீதி 2:11)

➢விளையாட்டுகளில் ஈடுபடுத்திக் கொள்ளலாம். புத்தகங்களை வாசிக்க தீர்மானிக்கலாம்.

➢Bible quiz தேர்வுகளில் கலந்து கொள்ளலாம்.

➢Coin, stamp... etc. சேர்த்து வைக்கும் முயற்சிகளில் ஈடுபடலாம்.

➢வேத வசனங்களை மனனம் செய்து எழுதி பார்க்கலாம்.

15-20 நாட்களுக்குள் எல்லா சமூக வலைதளங்களிலிருந்து வெளிவர, மேலே சொன்ன குறிப்புகளை பின்பற்ற வேண்டும்.

## நீங்கள் தூங்கும் அறைக்கு போனை எடுத்து செல்வதால் வரும் தீமைகள்:

⇨மூளையில் இரத்த ஓட்டம் பாதிக்கும்.குறைந்த நேரமே தூங்க முடியும்.

⇨ சரியான தூக்கமின்மை, காலையில் தாமதமாக எழ நேரிடும்.

⇨கதிர்வீச்சின் அபாயம் உங்கள் தோலையும், முடியையும், முழு சரீரத்தையும் பாதிக்கும்.

⇨இரவு வெளிச்சம் இல்லாமல் போன் பார்ப்பதால் கண்புற்றுநோய் பரவி வருகிறது.

⇨Headphone போட்டுக்கொண்டே இரவு தூங்கி காலையில் இறந்து நம்மை எச்சரிக்கிறது.

⇨Text message செய்து கொண்டே இருப்பதால் Community Skills பாதிப்புக்குள்ளாவீர்கள்.

⇨மூளை புற்றுநோய் வரும் என்று கலிபோர்னியா Department of Public health நமக்கு எச்சரிக்கிறது.

யாரோ பணம் சம்பாதிக்க நாம் ஏன் நம் நேரத்தை வீணடிக்க வேண்டும்.எனக்கன்பான இளம் நெஞ்சங்களே, சாதனை படைத்தோர் வரலாறுகளை படியுங்கள்.அவர்கள் வாழ்க்கையில் Gadgetக்கு bye சொன்னதால் இன்று அவர்கள் சாதனையாளர்களாய் வலம் வருகின்றனர். நீங்களும் சாதனையாளர்களாய் சரித்திரம் படைப்போராய், விஞ்ஞானிகளாய், எல்லா துறைகளிலும் சிறந்து விளங்க Gadget-க்கு bye சொல்லுங்க. நோய் இல்லாத வாழ்க்கை வாழுங்கள்.

- Ms.Hepzi

மற்றவர்களுக்கு முன் சாட்சியாய் நிற்க ஆயத்தமா?
நம் இயேசு அப்பாவிடம் helpகேளுங்க,
Overcome பண்ணுங்க சாட்சிகளை எழுதி அனுப்புங்க.
We are waiting for your result friends.





CHARACTER STUDY

# மெல்கிசேதேக்

மெல்கிசேதேக் யார் ?

இவர் பிறப்பு, இறப்பு பற்றி குறிப்பிடவில்லை.இவர் குடும்ப விவரம் குறிப்பிடபடவில்லை.ஆனால்.இவர் கி.மு 2000 ஆண்டுகளில் வாழ்ந்தவர் என்றும், கி.மு. 1000 ஆண்டுகளில் தாவீதால் பேசப்பட்டவரும், கி.பி 60ம் ஆண்டுகளில் இயேசுவோடு ஒப்பிடபட்டவராயிருக்கிறார். நமக்கு நம்முடைய தாத்தாவின் பெயரோ தாத்தாவின் தாத்தா பெயர் கேட்டாலே தெரியாது. ஆனால் இந்த மனிதரின் பெயர் பலஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னரும் பேசப்பட்டு இருக்கிறது.அப்படி என்ன விஷேசம் இவரிடம் என்று ஆராய்ந்து பார்ப்போம்.

ஆபிரகாமும், மெல்கிசேதேக்கும்:

ஆபிரகாமின் நாட்களில் ஒரு போர் எழும்பிற்று.ஆபிராமின் சகோதரனாகிய லோத்து சோதோமில் வாழ்ந்து வந்தான்.அந்த நாட்களில் நடந்த யுத்தத்தில் சோதோமில் இருந்தவர்களையும்,அவர்கள் பொருட்களையும் கொள்ளையிட்டார்கள். தன் சகோதரன் சிறையாக கொண்டு போக பட்டதை கேள்விப்ட்ட ஆபிராம். அவர்களை துரத்தி பிடித்து போர் செய்து பொருட்களையும் தன் சகோதரனையும் மீட்டான். இச்சமயத்தில் தேவனுடைய ஆசாரியனும், சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக் ஆபிராமுக்கு அப்பமும், திராட்சை ரசமும் கொடுத்து அவனை ஆசீர்வதித்து, வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. (ஆதி 14:19) சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்றான். ஆபிராமும் தன் தசமபாகத்தை அவனிடத்தில் செலுத்தினான்.

பிரியமானவர்களே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன என்பதை பார்ப்போம்:

1.பல நேரங்களில் நாம் நம் உற்றார் உறவினர்களை விருந்தினரை உபசரிக்க விரும்புகிறதில்லை.மெல்கிசேதேக் ஆபிராமை அப்பமும் திராட்சை ரசமும் கொடுத்து உபசரித்தான். நாமும் மற்றவர்கள் மேல் அன்பு வைத்து உபசரித்து ஆசீர்வதிப்போம் என்றால் அது ஆண்டவர் பார்வைக்கு நலமானதாய் இருக்கும்.




2.மெல்சேதேக் இந்த உலகம் உண்டாக்கியது கர்த்தரால் என்றும், அதை உடையவர் கர்த்தர் என்றும் நன்றாய் அறிந்திருந்தான்.ஆகையால் கர்த்தரின் ஆசீர்வாதம் ஆபிராமின் மேல் இருப்பதாக என்றான்.மெல்கிசேதேக் கர்த்தர் யார் என்று அறிந்திருந்தபடியால், கர்த்தரின் நாமத்தினாலே ஆசீர்வதித்தான். கிறிஸ்துவின் நாமத்தை அறிந்தவர்களாகிய நாம், கிறிஸ்துவின் நாமத்தை பிறருக்கு அறிவிப்பதும், கிறிஸ்துவின் நாமத்தால் பிறரை ஆசீர்வதிப்பதும் ஆண்டவர் பார்வைக்கு நலமாயிருக்கும்.சத்துருவை உன் கையில் கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று ஆண்டவர் நாமத்தை மெல்கிசேதேக் உயர்த்தினான்.அன்புடையீர் நம்முடைய வாழ்வில் நடக்கிற ஒவ்வொரு யுத்தத்திலும் ஜெயத்தை கொடுக்கிறவர் கர்த்தர் ஒருவர் மாத்திரமே. நாமும் நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு படியிலும் நம் கர்த்தரையே எல்லாவற்றிலும் முதன்மையாக வைக்க வேண்டும். நம்முடைய மாம்சம் நம்மை மேற்கொள்ளாதவாறு போராடி ஜெபிப்போம்! ஆண்டவரை மாத்திரம் மகிமைப்படுத்துவோம்.

இயேசு கிறிஸ்துவும் மெல்கிசேதேக்கும்:

மெல்கிசேதேக் என்பதற்கு நீதியின் ராஜா என்றும் சாலோமின் ராஜா என்பதற்கு சமாதானத்தின் ராஜா என்றும் பொருள். இவர் லேவி கோத்திரத்தை சேராதவராகிலும் பிரதான ஆசாரியன் ஊழியம் செய்யும் கனம் பெற்றிருந்தார். பிரதான ஆசாரிய ஊழியம் என்பது தன்னை தான் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு தேவனிடத்தில் ஜனங்களின் பாவங்களுக்காக பலிகளையும், காணிக்கைகளையும் கர்த்தருடைய ஆலயத்தின் திரைக்குள் பிரவேசித்து செலுத்துகிறதாம்.

நம் இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தை சேர்ந்தவர்.அவர் நம்முடைய பாவங்களுக்காகவும், அக்கிரமங் களுக்காகவும் நொருக்கப்பட்டு, பாடுபட்டு சிலுவையில் தன்னையே பலியாக கொடுத்தார். இவ்வாறு அவர் லேவி கோத் திரத்தை சேராதராகிலும் மெல்கிசேதேக் போல் பிரதான ஆசாரியர் என்று அழைக்கப்பட்டார்.இயேசு கிறிஸ்துவின் நாமம் சமாதான பிரபு என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் நமக்கு சமாதானம் கொடுக்கவே உலகத்திற்கு வந்தார். இவர் மெல்கிசேதேக் போன்று இருப்பதினால், மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றும் ஆசாரியராய் இருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே, நம்முடைய வாழ்க்கையில் மெல்கிசேதேக் போல நீதியுள்ளவர்களாயும், சமாதானம் உடையவர்களாயும், உபசரிக்கிறவர்களாயும், கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாயும் இருப்போம். தேவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

முக்கியக் குறிப்புகள்:

– இருப்பிடம்: ஆதியாகமம் 14:17-20, சங் 110:4, எபிரேயர் 5,6,7

– முக்கிய வசனம் : அவனை ஆசீர்வதித்து வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். அவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். ஆதி 14: 19,20

Bro.Tyson







# பெண்ணுரிமை

பெண்ணுரிமைக்காக வாதாடும்
ஒரு பெண் கேட்ட கேள்வி?

நம் பைபிளில் கூறப்பட்டுள்ள முப்பாட்டிகள் பெயர்கள் ஏன்
ஜெபத்தில் குறிப்பிடப்படுவதில்லை?

நமது பைபிளில் ஏன் குறிப்பிடப்பட்டுள்ள முற்பிதாக்களை பற்றி மட்டும் பேசி விட்டு, முப்பாட்டிகளை தவிர்க்கிறோம். பைபிளில் பெண்களுக்கு போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லையா? அவர்கள் வெறும் பிண்ணனி தகவலில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளனரா?

நமது பைபிளில்,ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று அல்லவா கூறிப்பிட்டிருக்கிறது. ஏன் சாராளின் தேவன், ரெபேக்காளின் தேவன், ராகேலின் தேவன், மற்றும் லேயாளின் தேவன் என்று குறிப்பிடவில்லை என்கிற உண்மை எனக்கு கஷ்டமாக உள்ளது.

பெண்களுக்கு நமது பரிசுத்த வேதாமத்தில் எந்த ஒரு முக்கிய பங்கும் இல்லை என்று கருதுபவர்கள் யூதகுடும்ப முறையை பற்றி தெரியாதவர்கள் என்றே கருதலாம். யூத முறைமையை தெரிந்தவர்களுக்கு இது எளிதாக புரியும்.பைபிளில் ஆதியாகமத்தை வாசித்தால், யூத நாட்டில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் தன் குடும்பத்தை கட்டி அமைப்பதில் முக்கிய பங்காற்றி யிருப்பதை காணலாம். ஆனாலும் யாத்திராகமத்தில், தேவன் தம்மை மோசேயினிடத்தில் முதன் முறையாக வெளிப்படுத்தினபோது, தன்னை இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் அனுப்பினவர் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும் மற்றும் யாக்கோபின் தேவனும் என்றே வெளிப்படுத்தினார்.மேலும் தேவன் மோசேயை நோக்கி, ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனு மாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்வாயாக. என்றென்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறை தோறும் இதுவே என் பேர்பிரஸ்தாபம் (யாத் 3:15). எஸ்றா மற்றும் மகாபெரிய சபையின் புருஷர்களும், தெய்வீக தூண்டுதலினால் தொகுத்த இந்த அனுதின ஜெபத்தை யூதர்கள் அனைவரும் சொல்லும் போது, ஒவ்வொரு நேரமும் இதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்வது நம் நினைவிற்கு வருகிறது.

எதற்கு தேவன் தம்மை, சாராளின் தேவனும், ரெபேக்காளின் தேவனும், ராகேல் மற்றும்
லேயாளின் தேவனும் என்று இவர்களுடைய பெயரை பயன்படுத்தவில்லை?

இதற்கு காரணம் ஆணுரிமை என்பதல்ல, முப்பாட்டிகளிடம் காணப்படாதது ஏதோ ஒன்று, முற்பிதாக்களிடம் தனித்தன்மை யாக காணப்பட்டது. அது என்னவென்றால் ஒரு உடைக்கப்படாத சங்கிலியேயாகும். இதைக்குறித்து பார்ப்போம். ஆபிரகாமின் மகன் ஈசாக்கு, ஈசாக்கின் மகன் யாக்கோபு,இம்மூன்று தலைமுறையே யூதமதத்திற்கு உடன்படிக்கையின் தலைமுறையாகும். ஆபிரகாம் முதல் யூதன். பிறப்பில் முதல் யூதனாக பிறந்த ஈசாக்கு. இவர்களின் யூத மார்க்கத்தை பின்பற்றி பிறந்த முதல் பேரக்குழந்தை தான் யாக்கோபு இதுவே உடைக்கப்படாத சங்கிலியாக காணப்படுகிறது.

முப்பாட்டிகள் எல்லாரும் முதல் தலைமுறை யூதர்கள். முற்பிதாக்களே, பரிசுத்தத்திலும், கலாச்சாரத்திலும், விசுவாசத்திலும் தொடர்ச்சியாய் நிலைத்திருந்தார்கள். இது மிக ஆழமாக அறிந்து கொள்ள வேண்டியதும், இம்மூன்று தலைமுறையிலும் நிலைத்தி ருந்த விசுவாசமே நிலையான, நிரந்தர முத்திரையாக உள்ளது.அதுவரையில் அது நிலையற்ற தன்மையிருந்தது.ஆபிரகாமின் வழி ஒரே ஒரு மகனாலேயே பின்பற்றப்பட்டது. அது ஈசாக்குக்கு ,இஸ்மவேலுக்கு அல்ல. ஈசாக்கின் விருப்பக்கொடையாக யாக்கோபுக்கே கொடுக்கப்பட்டது, அது ஏசாவுக்கு அல்ல, மூன்றாம் தலைமுறையான யாக்கோபே தன் எல்லா குமாரருக்கும் ஆவிக்குறிய சொத்தை வெவ்வேறு கோத்திரமாக பகிர்ந்தளித்தார்.

உலக வரலாற்றில் பல தொலைநோக்கு பார்வையுடையோர், பரிசுத்தவான்கள், புரட்சியாளர்கள் உலக மேடையில் மனிதநேயத்தை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு நடந்து கொண்டோர் அநேகருண்டு.ஆனால் ஆபிரகாம் மட்டுமே முதன்முதலாக இதை குடும்ப பிண்ணனியமாக கொண்டு வந்தார்.அதனாலேயே நித்தியம் வரை செல்லும் புரட்சியாளர்களாக இருவரும் இவருடைய சந்ததியும் மாறியது.அதனாலேயே, முற்பிதாக்களின் பெயர்களை ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனும் என்று நமது பைபிளில் வாசிக்கிறோம். 4000 வருடங்களுக்குப் பின் அவர்கள் ஜெபித்த அதே தேவனிடத்தில், அவர்களைப்போல நாமும் ஜெபிக்கிறோம். இவையெல்லாம் ஆபிரகாம் என்னும் ஒரே மனிதனால் ஆனது. ஆபிரகாம் தான் மட்டும் ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழாமல், தன் பிள்ளைகளுக்கும் தன் பேரப்பிள்ளைகளுக்கும் அதை கற்றுக்கொடுத்தினால் இது இந்த பேர்பிரஸ்தாபம் ஆபிரகாம் தொடர்ந்து சந்ததி முழுவதும் தொடர்ச்சியாக காணமுடிகிறது.

பெண்ணுரிமைக்காக வாதாடும் ஒரு பெண் கேட்ட கேள்விக்கு, பதிலாக பவுல் கலா 3:28ல் யூதனென்றும் கிரேக்க னென்றுமில்லை,அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் என்று எழுதியிருக்கிறார். மேலே பார்த்த முறைகள் எல்லாமே யூத வழக்கத்தின் படியே முற்பிதாக்கள், முப்பாட்டிகள் என்று வாழ்க்கை முறைமை இருந்தது. இது பழைய ஏற்பாட்டின் சந்ததி. நாம் அனைவரும் புதிய ஏற்பாட்டின் சந்ததி உங்களையும் என்னையும் கிறிஸ்துவின் சந்ததியாக கிறிஸ்துவாகவே வாழ்ந்து காண்பிக்கும் கிறிஸ்து அவர்கள் (கிறிஸ்தவர்கள்) என்று அழைக்கிறார்கள். இதில் ஆண்களை கிறிஸ்தவன் என்றும், பெண்களை கிறிஸ்தவள் என்றும் சொல்லுகிறார்கள். இதில் ஏற்றதாழ்வு காண்பிப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. தேவன் முன்பு அனைவரும் சமம்.முற்பிதாக்கள் காலத்திலே அவர்கள் பேர் பிரஸ்தாபமாகுவதற்கு பரிசுத்தத்திலும், கலாச்சாரத்திலும், விசுவாசத்திலும் தொடர்ச்சியாய் நிலைத்தி ருந்தார்கள். இம்மூன்றும் நம் கிறிஸ்தவ வாழ்விலும் தொடர்ச்சியாக இருந்தால், அது ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் சரி. கிறிஸ்துவுக்காக வாழ்ந்து தன்னை படைத்த தேவனுடைய பேர்பிரஸ்தாபம் விளங்க நம்மை ஒப்புக்கொடுப்போம்.

Bro.Isaac Kamalesh









ஆழமான அன்பு அளந்து பார்த்து
கொடுப்பதில்லை,
அது கொடுத்துக்கொண்டேயிருக்கும்
fmpb youth & teens wing
அன்பு இல்லாத உலகில்
அன்பைத் தேடி அலைகின்ற இளைஞனே!
அன்பு என்றால் என்ன? என்று சொல்லித்தந்த
அன்பே உருவான தெய்வத்தை பார்!
அவர் அன்பை வெளிப்படுத்தும்
அன்பின் கருவியாக செயல்படுவோமா?
நீங்கள்
கிரயத்துக்குக்
கொள்ளப்பட்டீர்கள்